78

இதழ் 10

ஜகன்மோகினி

ஆசிரியை:
வை.மு.கோதைநாயகி அம்மாள்

PHONE
86019



* JAGANMOHINI * MONTHLY *

78
OFFICE OF THE R... OF BOOKS
14 OCT 1941
MAD

தயாநிதி

[தொடர்ச்சி]

அணா 2 காசு 12

ஜகன்மோகினி காரியாலயம் சென்னை.

183058

"செம்பவளவாயான் திருவேங்கடமென்னும் எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே" — குலசேகராழ்வார்.

திருப்பதி-கோவிலும், குளமும்

*

" ஸ்ரீ வத்ஸன் ."

*

இமயம் முதல் குமரி வரையுள்ள சகல ஜாதி ஹிந்துக்களும் ஒருங்கே வணங்கும் ஸ்ரீ வெங்கடேச்வரர் தேவஸ்தானமும், அதை அடுத்துள்ள குளமும்...பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணுழ்வார், திருமங்கையாழ்வார் முதலியவர்களால் பாடப்பட்ட "வேங்கடம்" என்னும் ஸ்தலம்.



கோபுரவாசலும், கடைத் தெருவும்,

கோவிந்தா ! கோவிந்தா !
வெங்கட்ரமண
கோவிந்தா ! கோவிந்தா !



ஸ்வர்ணவிமானமும், த்வஜஸ்தம்பமும்.

"...........வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே."

* * * *

"தேனர் பூஞ்சோலை திருவேங்கடச்சுனையில்
மீனுய்ப் பிறக்கும் விதி யுடை யேனுவேனே."



ஸ்வாமிபுஷ்காணியும், நீராழிமண்டபமும்.

ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —**திருவள்ளுவர்.**

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —**ஸ்ரீ வீரராகவ கவி.**

மலர் 18	விஷு ௵ புரட்டாசி ௴ அக்டோபர் **1941**	இதழ் 10

ராகம் : பிலஹரி

பல்லவி

என்ன புண்ணியஞ் செய்தாயோ—மனமே!
என்ன புண்ணியம் நீ செய்தாயோ? (என்)

அனுபல்லவி

பொன்னரங்கன் பாதமே தஞ்சமென்றெண்ண (என்)

சரணம்

(1) *இன்னல் மிகுமிந்த்ர சாலவைபவத்தை*
மின்னல்—இது வேண்டாமென் றுதறித் தள்ள (என்)

(2) *இன்னமும் [illegible]?*
பன்ன[illegible]னின் கழல்கள் சூடி[illegible]கே? (என்)

—"பித்தன்."

சென்னை-600 005

சித்திர ரகளை

([illegible] படம்)

குண்டன்:—*யாரடா அது அன்னமலேக்கு அன்னண்டே!*

சோனி:—*நான்தான் நோயாளி. பத்தியம் சாப்பிட்றேன்.*

முக்கிய அறிவிப்பு—அவசியம் கவனிக்கவும்

மேற்படி தலைப்பின்கீழ் சென்ற ஜூன் ஜூலை இதழ்களில் உள்ளட்டையில் வெளியான 5 விஷயங்களையும் தயவுசெய்து கவனிக்கக் கோருகிறோம்.



மகாத்மாவின்

73-வது பிறந்த நாள்

மகாத்மா நீடூழி வாழ்க!

அவரது லக்ஷ்யம்

ஜயம் பெற்றோங்குக.

வனிதா மண்டலம்

மங்களம் :—கல்யாணி! விருந்தாளிகளுடன் வந்திருக்கிறேன். இவர்கள் உன்னைப் பார்க்கவந்திருக்கிறார்கள். நம்முடைய ஸ்திரீகள் சங்கத்தில் அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி உலகம் போற்றும் உத்தமரான மகாத்மா காந்தியடிகளின் ஜெயந்தியைக் கொண்டாடப்போகிறார்களாம். அதற்கு நீயும் வந்து ஒரு சொற்பொழிவாற்றவேண்டுமாம். அதைப் பற்றிப் பேசவே வந்திருக்கிறார்கள்.

கல்:—அப்படியா? மெத்த சந்தோஷம். நாம் ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தியையும், ஸ்ரீராமநவமியையும் எப்படிக் கொண்டாடுகிறோமோ அதே போல் இந்த ஜெயந்தியைக்கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா? கட்டாயம் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவேண்டியதுதான். அன்று என்ன செய்யப்போகிறீர்கள்?

துளஸி:—முதலில் ஒரு சிற்றுண்டிவிருந்து. அதற்கடுத்தது கடவுளை ப்ரார்த்திப்பது. பிறகு மகாத்மாவின் வைபவங்களையும், அவருடைய மகத்தான த்யாகத்தின் சிறப்பையும், அவர் லக்ஷ்யத்திற்கு எல்லோரும் ஆதரவு காட்டி ஒத்துழைக்கவேண்டுமென்பதையும்பற்றிப் பலபேர்கள் பேசுவார்கள். மகாத்மாவின் முக்ய தத்துவமாகிய ராட்டினத்தில் நூல் நூற்பதைப்பற்றி ஒரு சிறிய காக்ஷி நடத்திக் காட்டுவது. மகாத்மா நீடூழி வாழ்கவென்று எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வது. பிறகு மங்களம் பாடி முடிப்பது.

காவேரி:—இம்மட்டும் செய்துவிட்டுப் பேசாமலிருந்தால் போதாது. காதி வஸ்திராலயத்திலிருந்து ஏராளமான கதர் துணிகளை நம் சங்கத்திலேயே கொண்டுவந்து கடைபோட்டு எல்லோரையும் வாங்கும்படிக்குச் செய்யவேண்டும். காதி அபிவிருத்தியில்தான் மகாத்மா திருப்தியடைவார். வெறும் பாட்டும் பேச்சும் சிற்றுண்டியும் அவரை மகிழ்விக்காது. அவைகளால் நமக்குத்தான் மகிழ்ச்சி. தினம் கதரையே கட்டிக்கொள்ளும் பழக்க

மில்லாதவர்கள்கூட அன்று ஒரு ரவிக்கையாவது கட்டாயம் போட்டுக் கொண்டுதான் வைபவத்தில் கலக்கவேண்டும்.

ஸேது:—நீ சொல்வதுதான் சரி. ஸ்ரீஜெயந்தி, ராமநவமி இவைகளுக்கு வேண்டியபடி பலகாரங்களைச் சாப்பிட்டுவிட்டுப் பேசாமலிருப்பதுபோல் இல்லாமல் இந்த ஜெயந்தியில் "கதரையே கட்டவேண்டும். சுதேசி சாமான் களையேவாங்கவேண்டும்" என்கிறவிருதம் எடுத்துக்கொள்ளவேண்டும். இது கூட நாம் செய்யாமல் வீண் ஜம்பத்திற்கு, காந்திஜெயந்தி செய்தோம் என்று பலர் கொண்டாடுவதற்கும், பத்திரிகைகளில் புகைப்படங்களும் விஷயமும் வருவதற்கும் செய்தால் உபயோகமில்லை. மகாத்மாஜெயந்தி கொண்டாடுவதென்றால் குறைந்தது அந்த வாரத்தில் நம் சங்கத்தின்மூலம் ஆயிரம் ரூபாய் கதராவது விற்று ஆதரவைக் காட்டவேண்டும். இப்படிச் செய்தால்தான் உபயோகமுண்டு.

மங்:—பேஷ்! சொன்னாலும் ஒரு வார்த்தை ஆணி அறைவதுபோல் சொன்னாய். ஒரு காரியத்தைச் செய்வதென்றால் அதன் முக்ய தத்வத்தை ஒரு சிறிதாவது அனுஷ்டானத்தில் காணவேண்டும். ஏம்மா துளஸீ! கதர் விற்பனை உண்டா!

து:—பேஷாய் உண்டு. நாளைமுதல் வீடுவீடாகக் கொண்டுபோகப் போகிறோம். தினம் சங்கத்திலும் ஒரு கடை போடப்போகிறோம். அன்று காலைமுதல் இரவு வரையில் சங்கத்தில் கடை உண்டு. ஹரிஜன் சேரியில் சாப்பாடுபோட ஏற்பாடு செய்திருக்கிறது. சர்க்காப் போட்டியும் உண்டு. மகாத்மா காந்தி பாட்டுப் போட்டியும் முதல் நாள் நடத்தப்போகிறோம்.

சாவித்:—பேஷ்! குறிப்புகள் வெகு நன்றாயிருக்கிறதே! மகாத்மா வுக்கு மிகவும் ப்ரியமான ஹரிஜன் விஷயத்தைப்பற்றி ஒரு சிறிய நாடகம் ஒன்று போடுவதுதானே! வெகு பொருத்தமாயிருக்குமே!

துள:—எங்கள் தலைவிகூட சொன்னார்கள். அழகாகவும், ஆபாஸமோ அசந்தர்ப்பமோ இல்லாதும் சிறிய நாடகம் எழுதிக்கொடுத்தால் போடுவ தற்குத் தயார்தான். நீங்களே எழுதித் தயார் செய்தால் உடனே போடுவ தற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மங்:—சுமதி நினைத்தால் அடுத்த வினாடியே செய்துமுடிக்கும் சக்தி யுண்டு. என்ன சுமதீ! நீ அந்த கைங்கர்யத்தை எடுத்துக்கொள்கிறாயா! இன்னும் ஒருவாரம்தான் அவகாசமிருக்கிறது.

கல்:—ஒருவாரத்திற்குள் எழுதி குழந்தைகளைப் பழக்கி நாடகம் போட முடியுமா! அது சந்தேகந்தான்.

பானு:—எழுதுவதற்குச் சற்று அவகாசம் வேண்டியதுதான். தயாரா யிருப்பது கிடைத்தால் உடனே நானே குழந்தைகளுக்கு கற்றுக்கொடுத் துப் பழக்கிவிடுவேன்.

இந்து:—பானு! ஒன்று செய். "மகிழ்ச்சி உதயம்" என்கிற நாவல் இருக்கிறது பாரு. அதில் முக்யமான பாகங்களைப் பொறுக்கி எடுத்து அதை நாடகமாகப் போடலாமே! அதில் ஹரிஜனங்களைப்பற்றிய விஷய மும், ஜாதி இந்துக்கள் செய்யும் கொடுமையும் நிறையவருகிறதே. மாரியாத் தாளின் பெற்றோர்கள் பட்டினவாஸத்தைவிட்டு, நாட்டுப்புறத்திற்குத் திரும்பி குடிவருகிற பாகத்திலிருந்து ஆரம்பித்து, பூமாவும் அவள் கணவனும் தொண்டுசெய்து வெற்றி பெறுகிறவரையில் உள்ள பாகங்களைப் பொறுக்கி எடுத்து நான் தொகுத்துத் தருகிறேன். என்ன சரிதானா?

சும:—பேஷ்! ரொம்ப சரி. என்னம்மா! தயார் செய்யலாமா!

துள:—''பழம் நழுவிப் பாலில் விழுந்தது; அதுவும் நழுவி வாயில் விழுந்ததாம்'' என்ற பழமொழிப்படிக்கு எனக்கு ரெட்டைச் சந்தோஷமாகிவிட்டது. ரொம்ப ரொம்ப வந்தனம். இந்த பொருப்பைத் தங்களுக்கே விட்டுவிடுகிறேன். கல்யாணியம்மா! நீங்கள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசப்போகிறீர்கள்?

கல்:—வெறும் பேச்சாக பேசிக்கொண்டேபோவதைவிட அவருடைய அருமையான தொண்டுகளைப்பற்றியும் தியாகத்தைப்பற்றியும் பல பேர்கள் பாடியுள்ள பாட்டுக்களைத் தொகுத்து ஒரு சரித்திரமாகச் செய்து அதை ஹரிகதையாகச் செய்தால் நன்றாக இருக்குமென்று தோன்றுகிறது.

மங்:—பேஷ்! பேஷ்! எனக்குக்கூட வெகு நாட்களாக இம்மாதிரி யாரும் செய்யவில்லையே என்று குறையாகவிருந்தது. கவியரசர் ஸ்ரீ. சுப்ரமண்ய பாரதியாரின் சரிதையைக்கூட லேடீஸ் கிளப்பில் ஹரிகதையாகச் செய்தார்களாம். வெகு நன்றாக இருந்ததாம். நான்தான் கேட்கவில்லை. அதேபோல் இதையும் நீ தயார் செய்துவிடு.

காவே:—ஹரிகதை என்றால் எப்படி? ஆதோர் கீர்த்தனாரம்பத்தில்... என்று ஆரம்பிக்கின்றார்களே அப்படியா? அம்மாதிரி இதற்கு எப்படிச் சொல்வது?

கல்:—என் சொல்லமுடியாது? இதோ பார்; பாடிக் காட்டுகிறேன்.

பக்தி கொண்டாடுவோம் ஈசபக்தி கொண்டாடுவோம்
தேசபக்தி கொண்டாடுவோம்—உயர்
முக்தியும் வெற்றியும் சக்தியும் நல்கும் ஈச. (பக்)

என்று முதலடி பாடுகிறது. இம்மாதிரி செய்து நல்ல கீர்த்தியும், புகழும், தன்னுடைய ஜீவியகாலத்திலேயே அடைந்து இன்புற்று தியாகச்சுடராய் விளங்கியிருக்கிறார் என்றால் அது சாக்ஷாத் மகாத்மாவுக்குத்தான் பொருந்தும். அவர் என்ன சாமான்ய மனிதரா!

சத்யாக்ரக த்யாகி நம் காந்திமகான்
வித்யாவல்லவன் அருள் சக்தியுள்ளவன் பெரும்
சத்யஸ்வரூபன் காந்திமகான் (ச)
கலியுகந்தன்னில் வந்த கலிதீர்க்கும் தேவ ரூபன்
சலிப்பிலா ஊக்கங்கொண்ட காந்திமகான் (ச)

என்று பாடுவது. பிறகு,

போர்பந்தரில் பிறந்தார் மகாத்மாகாந்தி
பார்புகழ வளர்ந்தார் மகாத்மாகாந்தி.

என்று ஆரம்பித்துச் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்வது. ஏன் நன்றாகவிருக்காதா!

எல்லோரும்:—வெகு அழகாகவிருக்கும். இன்றுமுதலே தயார் செய்ய ஆரம்பித்துவிடு. முடிவு எப்படி முடிப்பாய்?

கல்:—இதொரு கேள்வியா! அத்தகைய தியாகமூர்த்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமெல்லோரும் உழைத்து அந்த மகானுபாவனின் ஜீவியகாலத்திலேயே சுதந்திர தேவியை தரிசித்துப் பூஜிக்கலாம். ஒத்துழையுங்கள். அந்த பெரியாரின் ஆயுள் பல்லாண்டு பல்லாண்டாகப் பெருகவேண்டுமாய் பகவானை ப்ரார்த்தனை செய்வது. மங்களம் பாடுவது. இன்னும் என்ன வேண்டும்?

துள:—எனக்கு இப்போதுள்ள சந்தோஷத்தைச் சொல்லவேமுடியவில்லை. காந்தி ஜெயந்தியை வெகு சிறப்பாக நம் சங்கத்தில் கொண்டாடி

னால் போதும். சரி. நான் வரட்டுமா ! மறுபடியும் எனக்கு ஒழிந்தால் வருகிறேன். அழைப்புக் கடிதம் அனுப்புகிறேன். நீங்கள் சிற்றுண்டி நேரத்திற்கு முன்பே வந்துவிடுங்கள்.

இந்:—சிற்றுண்டிகூட உண்டா ? பேஷ் ! இப்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது. என்ன சிற்றுண்டி கொடுக்கப்போகிறீர்கள் ?

பானு:—திருப்பித் திருப்பி ஜிலேபி, மிக்ஸர், சோமாசி,...இதுதானிருக்கும்.

துள:—இவைகள் ஒன்றுமில்லை. எங்கள் சங்கத்தின் அங்கத்தினராகிய ஸ்ரீமதி திரிபுரசுந்தரியம்மாள் புதிய உப்பு பலகாரம் செய்துகொண்டுவரப் போகிறார்களாம்; அதோடு தித்திப்புஒன்று சேர்த்துவைக்கப்போகிறோம்.

மங்:—அதென்ன உப்பு பலகாரம் ? சொல்லுங்கள்.

துள:—இதோ சொல்கிறேன்.

"ஜகன்மோகினி" போண்டா

இதற்கு வேண்டிய சாமான்கள்:—உருளைக் கிழங்கு, தேங்காய், பச்சைமிளகாய், உப்பு, பெருங்காயம், பொட்டுக் கடலை, எலுமிச்சம்பழம்.

முறை :—உருளைக்கிழங்கை அலம்பி, நன்றாக வேகவைத்து எடுத்துக்கொள்ளவும். ஆறின பிறகு தோலை யுரித்து, திட்டமாக உப்பு சேர்த்து அம்மியில் வைத்து தண்ணீர் சேர்க்காமல் வெண்ணெய்போல் அறைத்து எடுத்துக்கொள்ளவும். பிறகு இதை சின்ன எலுமிச்சங்காயளவு உருண்டைகளாகஉருட்டிக்கொள்ளவேண்டும்.

தேங்காயைத் துருவிக்கொண்டு அத்துடன் திட்டமாக பொட்டுக்கடலை, பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம், சிறிது பச்சைக் கொத்தமல்லி முதலியவை சேர்த்து, அதிகம் தண்ணீர்விடாமல் கெட்டியாக வெண்ணெய்போல் அறைத்துக்கொள்ளவேண்டும். இந்த சட்னியில் எலுமிச்சம்பழத்தை திட்டமாகப் பிழியவேண்டும்.

பிறகு உருட்டிவைத்த உருண்டைகளை—நல்லெண்ணெயைத் தொட்டுக்கொண்டு கொழுக்கட்டைச் சொப்புகள் செய்வதுபோல் செய்துகொண்டு, அதில் இந்த சட்னியை வைத்து, பிறகு வாயை மூடி முன்போல் உருண்டையாகச் செய்யவேண்டும். இதை லேசாக அரிசிமாவில் புரட்டி, காய்ந்த நெய்யில் போட்டு பொன்னிறமானதும் எடுத்துவிடவேண்டும். இதை சூட்டோடு சாப்பிட்டால் வெகு ருசியாகவிருக்கும்.

இதில் பச்சைப் பட்டாணி, வெங்காயம் முதலியவற்றை போட்டும் செய்யலாம். அப்போது சட்னி சேர்க்கக்கூடாது. கடுகும் பச்சைமிளகாயும் தாளித்து அதில் வெங்காயத்தை நறுக்கிப்போடவும். வெங்காயம் சிறிது வதங்கியபின், உரித்து வைத்திருக்கும் பட்டாணியையும் போடவும். வேண்டுமானால், இஷ்டப்படிக்கு விதவிதமான காய்கறி தினுசுகளையும் நறுக்கிப்போடலாம். வெற்றல் மிளகாய், தனியா, கடலைப் பருப்பு, லவங்கப்பட்டை முதலியவற்றை வறுத்து செய்த மஸாலாவை இதன்மேல் தூவி, திட்டமாக உப்புபோட்டு வதக்கவேண்டும். பிறகு முன்போல்

உருளைக் கிழங்கை சொப்பு செய்து அதில் இந்த கறியை வைத்து மூடி, காய்ந்த நெய்யில் போட்டு பொன் நிறமானதும் எடுத்துவிட வேண்டியது. (ஸ்ரீமதி. த்ருபுரசுந்தரி, டில்லி.)

கல்:—நன்றாயிருக்கும்போல் இருக்கிறது. பிறகு தித்திப்பு பக்ஷணம் எது சொல்லிவிடுங்கள்.

பானு:—அடேயப்பா! எத்தனை ஆத்திரம். சாப்பாட்டுராமியாய் பறக்கிறாயே!

இந்து:—நீ மட்டும் பறக்கவில்லையோ! அவள் பகிரங்கமாகச் சொல்கிறாள். நீ கவடு. உள்ளுக்குள்ளேயே தவிக்கிறாய்...சரி...தித்திப்பு பக்ஷணத்தைச் சொல்லுங்கள்.

துள:—இன்னொரு சினேகிதை ஸ்ரீமதி சூடாமணி என்பவர் தித்திப்பு பலகாரம் செய்துகொண்டு வருகிறாராம். அதாவது, பாதாம் பர்பியைப் போலவே ருசியும், மணமும் உள்ள வெள்ளரி பர்பி. செய்யப்போகிறாராம்.

வெள்ளரி பர்பி

வெள்ளரி பருப்பை நெய்விட்டு மணக்க வறுத்துக்கொள்வது. பிறகு அதை உரலில் போட்டு ஒன்றிரண்டாக இடித்துப் பொடி செய்துகொள்வது. அந்தப் பொடிக்கு திட்டமான அளவு, கோவா காய்ச்சிக்கொள்வது. இவ்விரண்டிற்கும் சரியான அளவு சர்க்கரைப் பாகு வைத்து பாகு பதம் வந்ததும் இரண்டையும் பாகில் சேர்த்துக் கிளறுவது. பாகுடன் கலந்து கொதித்துப் பதமாகும் சமயம், நல்ல காய்ந்த நெய்யில் கொஞ்சம் சேர்த்து நன்றாகக் கிளறுவது. ஒரு சிட்டிகை சோடா உப்பைப்போட்டு மீண்டும் கிளறி உப்பலாகப் பொங்கிவரும் சமயம் பாதாம் அல்லது வெனிலா, ரோஸ், ஆரஞ்சி முதலிய எஸன்ஸுகளில் பிடித்தமானவற்றை நாலு துளிகள் விட்டுக் கிளறிப் பிறகு நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி டயமன்போல் பில்லைபோடுவது. எஸன்ஸுகள் பிடிக்காதவர்கள் நல்ல குங்குமப்பூவை இழைத்துப்போட்டு, ஏலக்காயும் போட்டு செய்யலாம்... பாதாம்பருப்பு விலை அதிகம். இது அதைவிட மலிவு. ருசி என்னவோ அதே போலத்தான் ஏறக்குறைய இருக்கிறது. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரையில் சுலபமாகச் செய்யலாம். நிறையவும் காணும். ஆதலால் இதைத் தான் செய்யப்போகிறாராம்.

மங்:—இதுவும் நன்றாயிருக்கிறதே. பாக்குப்பொடியில் சேர்க்கிறோமே அந்த வெள்ளரிப்பருப்பா!

துள:—ஆமாம். அதுவேதான். அதையே முழுசாக அறைத்து பாதாம் எஸன்ஸ் சேர்த்து ஹல்வாக்கூட நான் செய்து பார்த்திருக்கிறேன். வெகு நன்றாயிருக்கிறது. பாதாம் கீர்மாதிரிகூட இதைச் செய்யலாம்.

கல்:—பேஷ்! பாதாம்பருப்பின் உபயோகத்திற்கெல்லாம் பெரும் பாகம் இதைச் சேர்க்கலாம்போலிருக்கிறது. நீங்கள் செய்துபார்த்தீர்களா!

துள:—ஓ! நன்றாகச் செய்து பார்த்திருக்கிறேன். பாதாம்கீரைப் போலவே இருக்கிறது. செலவும் குறைவு, ருசியும் அதிகம்.

இந்:—வாஸ்தவம். பாதாம் பருப்பு விற்கும் விலையில் எப்படி தினம் ஹல்வாயும், பர்பியும் கீரும் செய்யமுடியுமா! இது வெகு நன்றாயிருக்கிறது. சரி. கட்டாயம் சாப்பாட்டுக்கு வந்துவிடுகிறோம்.

துள:—ரொம்ப சந்தோஷம், நான் போய்வரட்டுமா!

கல்:—நல்லது. குங்குமமிட்டுக்கொண்டு போங்கள்.



(வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L.)

நித்தியானந்தர்:—வாணும் வாணும் சர்மாஜீ ! இன்றைக்கு புரட்டாசி சனிக்கிழமையென்பது உமது முகத்தைப் பார்த்தால் தெரியறதே !

லாவண்யசர்மா:—திருப்பதிக்குப் போய்விட்டு வந்தவர்களை சனிக்கிழமையன்று பார்ப்பது விசேஷமாயிற்றே யென்று இன்றுவந்தேன். ஸ்ரீ வெங்கடாசலபதியை சேவிக்கையில் என்னை நினைத்துக்கொண்டீரா ?

நி:—ஒவ்வொரு நிமிஷமும் நினைத்தேன். நீர் கூட வரவில்லையே யென்றுதான் குறையாயிருந்தது. கீழ்த் திருப்பதியில் குளத்தங்கரையில் ரேடியோ கேட்கும்போதுகூட உம்முடைய நினைவுதான் வந்தது.

லா:—உமக்குத்தான் ரேடியோவைப் பார்க்கும்போதும், கேட்கும் போதும், அதைப்பற்றி நினைக்கும்போதும் என் ஞாபகம் வராமலிருக்காதே. அது சரி. வழக்கப்படி கேட்கிறேன். சமீபத்தில், ரேடியோ எப்படி ?

நி:—நானும் பழக்கமாகப் பாடும் பல்லவியை பாடுகிறேன். சில பிரபல வித்வான்களின் கச்சேரிகள் இசை விருந்தாயமைந்தன. சில ஏமாற்றத்தைக் கொடுத்தன. சில நாடகங்கள் ரஸிக்கத்தக்கவையாயிருந்தன. சில நிகழ்ச்சிகள் விசேஷமாயிருந்தன...

லா:—இப்படி சொல்லிக்கொண்டேபோனால் என்ன அர்த்தம் ? விவரமாகச் சொன்னால்தானே ?

நி:—பாரதி தின நிகழ்ச்சிகள் வழக்கம்போல தடபுடலாகயில்லை யெனினும், ஒலிபரப்பப்பட்டவரையில் நன்றாகயிருந்தன. திருச்சியில் அன்றைய ஒலிபரப்பே பாரதி பாட்டுடன் ஆரம்பமாயிற்று. நாட்டாண்மைக்கார அண்ணன் பாரதியாரின் பெருமையைப்பற்றி உபந்நியாசம் செய்தார். தண்டபாணி தேசிகர் பாரதியார் பாடல்கள் சிலவற்றை புது மெட்டுகளில் பாடினார். சென்னையில் வஸந்த கோகிலம், கொத்தமங்கலம் சீனு, முதலியவர்கள் பாரதி பாட்டுகளை த்ருப்திகரமாக பாடினார்கள்.

லா:—முதன்முதலிருந்த உத்ஸாகம் நாளடைவில் குன்றிவிடுவது இயற்கைதானே. மற்றபடி விசேஷ நிகழ்ச்சி ஒன்றுமில்லையா ?

நி:—குருவும் சிஷ்யர்களும் சேர்ந்து தங்களது அபாரமான சாதகத்தைக் காட்டி மகிழ்வித்தார்கள்.

லா:—யார் ? என்ன கச்சேரி ?

நி.—ஸ்ரீ. சௌடய்யாவும் அவரது சிஷ்யர்களில் நால்வரும் சேர்ந்து வயலின் இசைவிருந்து அளித்தார்கள். 5 பேர் ஒரே சமயத்தில் பிடில் வாசித்தது இதுவே முதல்தரம். ரொம்பவும் கச்சிதமாய் அமைந்தது. கல்யாணி ஆலாபனமும் கீர்த்தனமும் விசேஷமாயிருந்தது. ஐவரிடமிருந்த 'ஒற்றுமையும் சமரஸமும்' அவர்கள் செய்துள்ள அப்பியாசத்தின் தன்மையைக் காட்டியது. இம்மாதிரி ஒரு கச்சேரியை ஒலிபரப்ப வேண்டுமென

தீர்மானித்ததற்காக அ. இ. ரே. வையும், மிகவும் வெற்றிகரமாக நடத்திய தற்காக ஸ்ரீ சௌடய்யா கோஷ்டியாரையும் பாராட்டவேண்டியதுதான்.

லா:—சிறு நாடகங்கள்? ஹாஸ்ய நிகழ்ச்சிகள்?

நி:—ரேடியோ நாடக அமளி (தி. 23); நவீன தமயந்தி ஸ்வயம்வரம் (தி. 24); பிரசங்கமாரி (தி. 16); கம்பன் இன்று உயிருடனிருந்தால்? (தி. 5); முதலிய நிகழ்ச்சிகளை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஹாஸ்ய ரஸம் ததும்ப, உயர்ந்த நடிப்புடன் விளங்கின.

லா:—பிரசங்கங்கள் ஒன்றுமில்லையோ?

நி:—"எது தமிழ்?" என்ற தொடரில் சொற்பொழிவுகள் ஒலிபரப்பப் படுகின்றன. தமிழ்க்கிழவர் ஸ்ரீ சாமிநாதையர் எழுதியதைப் படித் தார்கள். வசன நடையிலும் செய்யுள் நடையிலும் தமிழ் மரபு ஒலித்துக் கொண்டிருப்பதைப்பற்றி ஸ்வாரஸ்யமாக எளியநடையில் எழுதியிருக்கிறார்.

லா:—விசேஷ கச்சேரிகள் நிறைய உண்டோ?

நி:—பல கச்சேரிகள் ஒலிபரப்பப்பட்டன. அவைகளுள் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவை முசிரி (13வ.), செம்பை (18வ.), ராமாபாகவதர் (25வ.), செய்த அருமையானகச்சேரிகள். முசிரி சங்கராபரணத்தை 'கசக்கிப் பிழிந்து எஸ்ஸென்ஸ் எடுத்து' எல்லோருக்கும் சுவையுடன் அளித்தார். செம்பை முழுதும் தமிழ்ப்பாட்டுக் கச்சேரியாகவே செய்துவிட்டு, மங்களம் மாத்திரம் தெலுங்கில் சம்பிரதாயம்போலப் பாடி ஸ்வரம்கூடப் போட் டார். ராமா பாகவதரின் கச்சேரியில் ஒவ்வொரு உருப்படியும் விசேஷமாய் அமைந்தது. அவர் 'பாணி'யில் ஒரு தனி இனிமை எப்போதும் சோபிக் கின்றது. ஷை கச்சேரிகள் தவிர சில நாகஸ்வர கச்சேரிகள் விசேஷமாய் அமைந்தன. சென்னை ஏ. பார்த்தஸாரதி (ம. 10வ) காலிகா, தரார்த்தரி முதலிய அபூர்வ ராகங்களை அனுயாசமாக வெகு திறமையுடன் வாசித்தார். குளிக்கரை பிச்சையப்பா (தி. 5வ) திருவாவடுதுறை நடராஜசுந்தரம்பிள்ளை (தி.19) முதலியவர்களின் நாகஸ்வரமும் எப்போதும்போல நன்றாயிருந்தது.

லா:—புதிய பாடகர்கள் ஒருவருமில்லையோ?

நி:—சொல்வதற்குள் அவசரப்படுகிறீரே. ஸ்ரீமதி ஜானகி ஸ்ரீனி வாஸன் (ம. 17வ) ஜகன்மோகினியில் வெளியான கீர்த்தனைகளில் மூன்றை சுத்தமாகப் பாடினார். இவர் விரைவில் அபிவிருத்தி அடைவார் என்று தோன்றுகிறது. குமாரி அனந்தலக்ஷ்மி (தி. 27வ) அசாத்திய திறமையுடன் பாடினாள். அடிக்கடி பாடுவதற்கு சந்தர்ப்பமளித்தால் இவ்விளம்பாடகி ஒரு நக்ஷத்திரமாவாள் என்று எண்ண இடமிருக்கிறது... சொல்ல மறந்து விட்டேனே! ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள், (ம. 20வ) எஸ். வி. பார்த்த சாரதி (ம. 24வ); ஸ்ரீமதி ஆர். ருக்மணி (ம. 26வ); ஸ்ரீமதி சொக்கம்மா (தி. 26); முதலியவர்களின் கச்சேரி மிகவும் ரஸிக்கத்தக்கதாய் அமைந்தது.

லா:—நவராத்திரிக்காக விசேஷ ஒலிபரப்பு உண்டா?

நி:—தீக்ஷிதரின் நவாவரண கிருதிகளை திருச்சியில் தினம் ஒன்றாக ஒலிபரப்புகிறார்கள். தேவி விஜயம், நவராத்திரி மஹாத்மியம் என்பதைப் பற்றி உபந்நியாசங்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வந்து கேளுமே.

லா:—தீபாவளியன்று விசேஷ ஒலிபரப்பு ஏற்பாடு செய்தால் நன்றா யிருக்கும் அல்லவா?

நி:—அன்றைய ஒலிபரப்பை அதிகாலையில் 5 மணிக்கே நாகஸ்வரத் துடன் துவக்கி, தீபாவளி மகாத்மியத்தை விளக்கும் நிகழ்ச்சியும், தீபாவளி க்கொண்டாட்டமும் ஒலிபரப்பினால் நன்றாயிருக்கும்.

திருப்பதி யாத்திரை

வை. மு. ஸ்ரீநிவாஸன்.

"வேங்கட்ரமண கோவிந்தா! கோவிந்தா!" என்ற கோஷத்துடன் பம்பாய் எக்ஸ்ப்ரஸ்ஸைவிட்டு இறங்கி அடுத்த லேனில் காத்துக்கொண்டிருந்த திருப்பதி வண்டியை நோக்கி விரைவாக நடக்கலானோம். கூட்டம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. வண்டியின் கதவைத் திறக்கவும் முடியாதவாறு கதவருகிலும் பிரயாணிகள் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் எத்தனை பேரிடம் டிக்கட்டு இருந்ததென்றோ, அல்லது அவர்களில் பலர் குளித்து எத்தனை காலமாயிற்றென்றோ என்னால் சொல்லமுடியாது. ஏதோ ஒரு வண்டியில் ஏறினோம். டிக்கட்டில்லாதவர்கள் உட்காருவதும், டிக்கட்டுடன் செல்பவர்கள் நிற்பதும் என்ற விதிப்பிரகாரம், நாங்கள் எல்லோரும் நின்றுகொண்டே யிருந்தோம். வண்டியும் நகர்ந்தது. வாயு வேகமோ! மனோவேகமோ! என்றெல்லாம் சொல்வார்களே அதெல்லாம் என்ன வேகம்! இந்த வண்டி எறும்பு ஊருவதுபோலச் சென்றதல்லவா வேகத்திலும் வேகம்! 6 மைல் தூரத்தை அரைமணியில் அடைந்து செல்கையில், மணிக்கு 50 மைல் வேகத்தில் பூனா - பம்பாய் எக்ஸ்பிரஸ்ஸில் சென்றது எப்படி நினைவுக்கு வராமலிருக்கும்?

கீழ்த்திருப்பதி ஸ்டேஷனை அடைவதற்குமுன்பே ஸ்ரீ கோவிந்தராஜர் கோவிலின் கோபுரம் காக்ஷி அளிக்கின்றதல்லவா? அதைப் பார்க்கையில் எழுந்த "கோவிந்தா" கோஷத்தில், அரைமணியாக அவஸ்தைப்பட்டுக் கொண்டு நின்ற சிரமமெல்லாம் மறைந்துவிட்டது. எல்லோரும் கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் பாடிக்கொண்டே திருப்பதியை அடைந்தோம்.

* * * * *

"லக்ஷ்மியைத் துதித்து அவள் மூலமாக ஸ்ரீ எம்பெருமானின் கிருபா கடாக்ஷத்தை அடையவேண்டுமென்பது நமது சித்தாந்தமல்லவா? அதே போல திருமலைக்குச்செல்வதற்குமுன்பு திருச்சானூர் சென்று ஸ்ரீபத்மாவதி தேவியை சேவித்துவிடவேண்டுமெனத் தீர்மானித்து சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டோம். மாலையில் திருச்சானூருக்குச்சென்றோம். ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் என்னும் பத்மாவதி தேவிக்கு திருமங்கலியம் சமர்ப்பித்து அர்ச்சனை செய்வித்து மனங்குளிர நன்கு சேவித்துவிட்டு மற்ற இருசந்நிதிகளையும் சேவித்துவிட்டுப் பிராகாரபிரதக்ஷணம்செய்தோம் ஸ்ரீ பத்மாவதியின் ஆகர்ஷண சக்தியை என்னென்று சொல்வது? திரும்பவும் சந்நிதிக்குள் சென்று அர்ச்சனை செய்வித்துச் சேவித்துவிட்டு வெளியேறினோம். நன்றாக இருட்டிவிட்டது. குளத்தின் கரையில் விளக்குகளையே காணோம்! கீழ்த்திருப்பதியின் முனிஸிபல் எல்லை அடையும்வரை தெருவில் விளக்கே இல்லாதிருந்தது ஆச்சரியமாயிருந்தது. அந்த இருட்டிலும் பிச்சைக்காரர்கள் வண்டியின் பின்னால் விடாகண்டர்களாக ஓடிவந்து கொண்டிருந்தார்கள். இருட்டில் தம்பிடிக்கும் கால் ரூபாயிக்கும், அல்லது காலணாவுக்கும் அரை ரூபாவுக்கும் வித்தியாசம் எப்படித் தெரியும்? ஏதோ கைக்ககப்பட்டதைப் போட்டுவிட்டு கீழ்த்திருப்பதிக்குத் திரும்பினோம்.

* * * * *

அன்றிரவு தூக்கமே வரவில்லை. எப்போது மணி மூன்றடிக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தோம். அவ்வாறே விடியற்காலை மலை

யடியை யடைந்து சுமார் 4-30 மணிக்கு மலே ஏற ஆரம்பித்தோம். மங்கலான நிலவு வெளிச்சமும், பிரகாசமான மின்சார விளக்கின் ஒளியும் இருக்கையில் கும்பல் கும்பலாக ஜனங்கள் ஏறிச்செல்வது என்ன அதிசயம்? சூரிய உதயத்திற்கு முன்பாகவே காலிகோபுரத்தைத் தாண்டிவிட்டோம். அந்த கோபுரவாயலில் நின்று கீழ்வானத்தைப் பார்க்கையில் கண்ட காக்ஷி—பொழுது புலர்வதற்கு முன்புள்ள வான நிலேயும், மேகங்களின் கூட்டமும்—என்றென்றும் மறக்கமுடியாத ஆனந்ததையளித்தது.

சுமார் 6-30 மணி இருக்கும். பாதி தூரம் தாண்டியாய்விட்டது. நாங்கள் நிதானமாக நடந்து கொண்டிருக்கையில் பின்னுலிருந்து கீழ் கண்ட சம்பாஷணே கேட்டது:

ஒருவர்:—அவ்ன் இன்ஞ சொன்ஞன்? "ஓய். ராமரே. நீர் இப்படி செய்யலாமா? நான் யாரு? மிருகந்தானே. எங்களுக்கு அண்ணன் தம்பி இன்னுல்லாம் உண்டா. அப்படியிருக்கச்சே இப்படி நேருக்குநேர்வராதெ பண்ணலாமா? இது ஞாயமா? நீர் க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவரில்லேயா? இது தருமமா" இன்னு நேரே கேட்டுட்டான்.

மற்றெருவர்:—கேக்கமாட்டான் பின்னே! நல்லா கேட்டுட்டான். அதுக்கு இன்ஞ சொன்ஞரு அவர்?

இன்னுமொருவர்:—ஆ. இன்ஞ சொல்லு வாரு! "அடே குரங்கே! ஒன் தலேலே அதுமாதிரிதாண்டா எயுதியிருந்தது. அதுக்கு நான் இன்ஞ பண்ரது" அப்படின்னுதான் சொல்லியிருப்பாரு.

முதல்வர்:—அதுக்குள்ளே அவசரப்பட்டீங்களே! இன்னும் வாலி சொன்னதே நான் முடிக்ககல்லியே! "ஏ. ராமா. நான்தான் ஒரு சின்ன மிருகம்னு தெரியுமே. இந்த கொரங்கோடெகூட நேருக்குநேரா யுத்தம் பண்ணுதெ இப்படி மறவுலேந்து அம்பு போட்ரதுதான் க்ஷத்திரிய வீரனுக்கு பெருமையா?"

இவ்வாருக அம்மூவரும் ராமாயணத்தின் ஒரு பகுதியைப்பற்றிப் பேசிக்கொண்டே வேகமாக நடந்தும் ஓடியும் எங்களுக்கு வெகு தூரம் முன்னணியில் சென்றுவிட்டார்கள். பாமரர்களிடையேயும் ராமாயணமும் ஸ்ரீராமனின் பெருமையும் எவ்வளவு பரவியுள்ளது என்று சந்தோஷப் பட்டுக்கொண்டே சென்ருேம்.

* * * * *

பணம் கொடுத்தால் தர்மராஜாவென்றும், கொடுக்காவிட்டால் கர்மியென்றும் சொல்வது பிச்சைக்காரர்களுக்கு வழக்கமல்லவா? அவர்களின் வசையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவாவது சிலர் அவர்களுக்கு ஒரு தம்பிடியாவது கொடுத்து வாயைப் பொத்துவது வழக்கம். ஒரேயடியாக சுமார் இரண்டாயிரம் பிச்சைக்காரர்களே த்ருப்தி செய்வது எப்படி? மலேயடிவாரத்திலிருந்து திருமலே தேவஸ்தான கோபுரவாசல் வரை செல்வதற்குள் குறைந்தது 2000 பிச்சைக்காரர்களேயாவது காணலாம். அவர்களில் சிலர் பிறவியிலேயோ அல்லது பிறகோ கண்ணேயோ, கையையோ, காலேயோ இழந்த அதிருஷ்ட ஹீனர்கள். சிலர் வயிற்றிற்கில்லாதிருந்தும் பெரிய குடும்பிகளாகிவிட்டதால் வறுமையில் அவதியுறுபவர்கள் அவர்கள் இளங்குழந்தைகளேயும் பிச்சைக் கேட்கும் தொழிலில் நன்ருய் பழக்கியுள்ளார்கள். இன்னும் சிலர் வியாதியஸ்தர்கள்—பெரிய வியாதியோ, குஷ்டரோகமோ பீடித்தவர்கள். இன்னும் சிலர் பொய்க்கால்

களும், கைகளும் மொண்டி முடவன்போல் வைத்துக்கொண்டு வியாதியஸ்தர்போல் பாசாங்கு செய்யும் திடகாத்திரமுள்ள தரித்திரர்கள். இவ்வாறாகப் பலவித பிச்சைக்காரர்கள் எழுப்பும் கூக்குரல்களை உபத்திரவம் என்று எண்ணுவதா? அல்லது ஈசுவர சோதனை என்று நினைப்பதா? அல்லது பூர்வஜன்மத்தில் செய்த பாபத்தின் பலனை இப்போது அனுபவிக்கிறார்கள் என்று கருதிப் போசாமல் போவதா? உண்மையில் அவஸ்தைப்படுபவர்களைப் பார்த்தாலோ மனம் இளகிவிடுகிறது. பாசாங்கு செய்பவர்களைப் பார்த்தாலே ஆத்திரம் வந்துவிடுகிறது. இந்த துர்ப்பாக்கியர்களுக்கு விமோசனம் எப்போது வரும் என்று நினைக்காமலிருக்க முடியாது.

(தொடரும்.)

விகட வெடிகள்

OFFICE OF T. E... 14 OCT 194 MADRAS

"விருச்சிகம்"

உபாத்தியாயர்:—ஆகாயத்தில் பல வர்ணங்களை ஒரே சமயத்தில் காண்கிறோமே அதுபோல் வேறு எங்கேனும் காணமுடியுமா!

ஒரு பையன்:—முடியும் சார்! நிறைத்த தலைக்கு டை (சாயம்) போடுகிறார்களே அவர்கள் தலையில் காணலாம்.

* * * * *

உபாத்தி:—கணக்குடன் அளவாய் செலவு செய்யாதவர்களின் வீடு எதற்கு உதவும்?

பையன்:—கடன்காரன் தமுக்கு தட்ட உதவும்; பிறகு பொதுஜனங்கள் கல்யாணம் முதலியன செய்ய உதவும் சார்!

* * * * *

டாக்டர்:—நீ கண்டபடி தின்றுவிட்டதனால் அஜீர்ணமாகிவிட்டது. என்னென்ன தின்றாய்?

நோயா:—ஐயையோ! சாமீ! நானு அப்படி திண்டிக்காரனில்லேங்க. எங்கமாமியார் ஊட்டுலே விருந்து வெச்சாங்க. 12 லட்டுகூட செல்லலீங்க. மரியாதைக்காவது 15 வடேதானுங்க துண்ணேன். கிண்ணி பாயஸம் குடிக்கறத்துக்குள்ளாற வாந்தி வந்திடிச்சுங்க. சோறு ரவேயுண்டுதானுங்க துண்ணேன்.

* * * * *

வெங்கிடி:—என்ன சிங்காரி! கோயிலுக்குப் போகச்சே பொடவே நன்றாயிருந்தது, இப்ப இப்படி கிழிஞ்சுகெடக்கறதே.

சிங்காரி:—அந்த வயத்தெரிச்சலே ஏன் கேக்கறே? பெண்டுகள் வினியோகம் வாங்கும் கொள்ளையில் ஒரே அமர்க்களம். ஒத்தர்மேலே ஒத்தர் விழுந்து நசுக்கிக் கிள்ளி மெரிச்சு புராண்டி பக்தி பண்ணத்துலே பக்தி எல்லாம் எம்பொடவையே கிழிச்சுடுத்து...வெக்கக்கேடு.

1. ‘எதைப்பார்த்தாலும் வாங்கிவிடவேணும் என்று ஆசை; கடைக்குப்போனால் 50 ரூபாயிக்குக் குறைந்து செலவு செய்வதில்லை’ என்று சிலர் வெகு பெருமையாகப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் வீட்டிற்குச் சென்று பார்த்தாலோ, அம்மாள் சொல்லியபடி பிரமிக்கத்தக்க சாமான்கள் எதும் காண்பதே அரிதாயிருக்கிறது. பலர்முன்பு இந்த ஜம்பம் எதற்கு ?

2. கணவனுடைய கஷ்டத்திற்கு மனப்பூர்வமாகத் தன் நகைகளைக் கழட்டிக்கொடுத்து சமயத்திற்கு உதவும் உத்தமிகளை உலகம் புகழுமா ? கணவனின் கஷ்டமறிந்தும் ஜவுளிக்கடைகளிலும் காப்பி ஓட்டல்களிலும் கூசாமல் கடன்வைத்துக் களிப்புறும் புண்ணியவதிகளைப் புகழுமா?

3. ‘பெற்ற தாயே பேயாக விருப்பாளா !’ என்று ஒரு வியப்பு. பேயானாலும் தாய் என்பது பழமொழி. இப்பழமொழி என் உண்டாகியது? பேயைவிடக் கேவலமான நிலைமையில் சில தாய்மார்சள் இருக்கிறார்கள்? அவர்களை பேய் என்றெண்ணாமல்குணத்தைஎண்ணி குற்றங்களைமறந்துதாய் போலவே நினைக்கவேண்டுமென்பதைத்தான் அப்பழமொழி குறிக்கின்றது.

4. பெற்ற மக்கள்மீது அன்புகாட்டத் தெரியாத ஒரு ப்ரக்ருதிக்குப் பிறரிடம் தக்காருக்குத் தக்கபடி மரியாதை காட்டி நல்ல பெயர் வாங்க எப்படித் தெரியும் ? எல்லோரிடமும் மனஸ்தாபந்தான்.

5. நோயாளி நோயற்றவனைப் பார்த்து ‘நீ பாக்கியசாலி’ என்கிறான். அதேபோல் தரித்திரன் செல்வவந்தனையும், மலடி குழந்தைகளைப்பெற்ற தாயாரையும், சண்டைக்கார மனைவியுடன் அவதிப்படுபவன் அன்யோன்ய தம்பதிகளையும், அதிக உழைப்பாளி சுகவாசியையும், இரவில்தூக்கமில்லாது திண்டாடுபவன் ஆனந்த நித்திரை செய்வோனையும் பாக்கியசாலி என்கிறார்கள். இந்த குறைபடும் மனிதர்களைப் பார்த்தும்‘நீங்கள் பாக்கியசாலிகள்’ என்று அதனினும் கீழ்ப்பட்டவர்கள் சொல்வார்கள். இதில்முடிவு எது?

6. 70 வயது ஆனாலும் சிலருக்கு சமயத்திற்குத் தக்க இங்கிதமான ஞானம் உண்டாவதே இல்லை. ஒரு நாள், கிழமைகளில்தான் அவர்கள் தம் முரட்டுச்சுபாவத்தையும், அசட்டுத்தனத்தையும் காட்டி பலர் முன்பு வீண் சச்சரவையும், அவமானத்தையும், ஆத்திரத்தையும் விளைவிக்கிறார்கள்.

7. தம்மைத்தாமே அழகு என்றும், புத்திசாலி என்றும் நினைத்துவிடுகிறவர்களுக்குப் பிறருடைய புத்திசாலித்தனத்தை அறிய மனமும் இல்லை; அறியுந் திறமையுமில்லை. அத்தகையவர்கள்தான் பலராலும் பலவிதத்திலும் இழிவுபடுகிறார்கள். அதுவாவது தெரியுமா ?

8. அடேயப்பா! ‘பெண்டாட்டி ஆத்தே, பெரும்ஆத்தே’என்பார்கள். அதை இக்காலத்தில் சில புதிய கல்யாணப்பிள்ளைகள் நிரூபித்தேவிடுகிறார்கள். ‘‘ஆசாரியர் திருவடிகளே சரணம்’’ என்று தொழுவதைக்கூட மறந்து, ‘‘ஆத்துக்காரி...மாமியார்...திருவடிகளே சரணம்’’ என்று புத்தி மாறாட்டமாகிவிடுகிறது.

9. உயர்ந்த பெண்களை ஓயாது தேடுகிறவனுக்கும், உயர்ந்த பிள்ளைகளை ஓடிஓடித் தேடுகிறவர்களுக்கும் கடைசியில் ஒரு சொத்தைதான் கிடைக்கிறது. ப்ராப்தம் என்ற பந்தலில் மேற்குறித்த தாபத்தைத் தீர்த்துக்கொள்வது உலகசம்பிரதாயமாய்விட்டது.

29

ஸந்தோஷம் பொங்குகிறவர்களுக்கு என்றும் பொங்குவது எங்கோ ஒரு சிலருக்குத்தான் நேருகிறது. ஆனால் பட்ட காலிலே படும்; கெட்டகுடியே கேடும்'' என்ற பழமொழிப்படிக்கு ஒரு துன்பத்திற்குமேல் மற்றொன்று அதற்குமேல் பின்னொன்று என்று வருவது சில துர்ப்பாக்ய மனிதர்களின் பிறவிநிழல்போலாகி விடுகிறது.

அந்த அம்சத்தில் ஞானம்பாளின் குடும்பம் முதன்மை ஸ்தானத்தில் நின்றது. எத்தனைதான் தாமோதரன் மனத்தைத் தேற்றிக்கொண்டு மாதவரம் செய்தாலும் சிலஇடங்களில் கிடைக்கும் வசையைக் கேட்கும்போது 'இப்படிப் பிச்சை எடுத்து வாழ்வதை விடப் பட்டினி கிடந்து சாகலாம்' என்று மீண்டும் ரோஷத்தில் பொத்திக்கொண்டு தோன்றியது.

சமையல் செய்வதற்கும் தயாரானன். ஆனால் பணம் கொடுத்து வைத்துக்கொள்பவர் யார்? ஓட்டலில் 'சாப்பாடு, காப்பி, டிப்பன் சப்ளை செய்வதற்கு இரண்டு வேளை சாப்பாடு உனக்குப் போட்டு விடுகிறேன்; கையில் காலணு கொடுக்கமுடியாது'என்றுகூறினர்கள்.

தான்மட்டும் சாப்பாட்டிற்கு வழி செய்துகொண்டால் பெற்ரோருக்கு என்ன செய்வது என்கிற கவலையுண்டாகியது. அன்று காயும் கடுமையான வெய்யிலில் ஜனங்கள் வீட்டிற்குள் இருக்கவும் தவித்தார்கள். 112 டிக்கிரி வெய்யிலில் தாமோதரன் மாதவரத்திற்குக் கிளம்பினன். காலே கீழே வைக்கவேமுடியாது நெருப்பு போல் உஷ்ணம் தகிக்கின்றது. தலே வெடித்துவிடும்போல் காய்கிறது. என்ன செய்வான் பாவம்!

ஒவ்வொரு வீட்டிலும் முற்காலத்தைப்போல் அழகாயும் விசாலமாயும் குறடும், திண்ணைகளும் நிழலுக்குப் பந்தலும் இக்காலத்தில் உண்டா! எந்த வீட்டைப் பார்த்தாலும் இரும்புக் கதவுபோட்டு அடைத்திருப்பதால் அக்கதவையும் அனேக வீடுகளில் எந்த நேரம் பார்த்தாலும் பூட்டிவிடுகிறார்கள். அவசரம் என்று யாரேனும் வந்தாலும் சூரட்டுப்படியிலேயே நின்று நாலுநாழிகை கத்தினல், கதவை இடித்தால் பிறகு "யாரு" என்று ஒரு குரல் கேட்கும். அதன்பிறகு சிலர் ஆளைப் பார்த்துக்கொண்டு கதவைத் திறப்பதும் உண்டு; சிலர் அப்படியே பதில் சொல்லியும் அனுப்பிவிடுவார்கள். வெறும் மனிதர்களுக்கே இப்படி என்றால் பிச்சைக்காரர்களுக்குக் கேட்கவேண்டுமா? 'போ! போ!' என்று நாயைவிடக் கேவலமாகக் குலைத்துவிட்டுப் போய்விடுவார். எங்கோ, நூற்றில் ஒரு புண்ணியாத்மாக்கள் போட்டாலும் போடுவார்கள்.

தாளிட்டிருக்கும் கதவின் கீழே படியில் நிற்பதற்குள் வெயிலில் கால் பொறிந்துபோய்விட்டது. "அம்மா! தாயே! பவதி பிக்ஷாந்தேஹி" என்று எத்தனை கத்தியும் சில வீடுகளில் நாயே தனது

இன்னிசையால் ஆலாபனை செய்து அனுப்பிவிட்டது. சில வீடுக ளில் மனிதர்களே நாயின் வேலையைச் செய்தார்கள்.

அன்று அவனுடைய போதாக்காலக் கொடுமையில் காயும் வெய்யிலில் ஓரடிகூட எடுத்துவைக்கமுடியாது தவித்தவாறு, அங் குள்ள ஒரு பிள்ளையார் கோயிலில் களைப்பால் அப்படியே படுத்து விட்டான். பாத்திரத்தில் கிடைத்துள்ள சாதம் ஒரு ஆளுக்குக் கூடப் போதாது. அதைக்கொண்டு மூன்று ஆத்மாக்கள் எப்படி த்ருப்தியடையமுடியும்?

ஏதோ உள்ளதைக்கொண்டு அவர்களுக்குக் கால்வயிற்றுக் காவது போடலாம் என்று மீண்டும் தானே சமாதானமடைந்தான். எனினும் வெய்யிலின் வெப்பத்தைச் சகிக்கவே முடியவில்லை. ஆத லால் தன்னை மறந்து சற்றுநேரம் அயர்ந்து படுத்திருந்தான்.

அச்சமயம் அவன் வைத்திருந்த பாத்திரம் ஓசைப்படுவதைக் கேட்டு திடுக்கென்று கண்விழித்துப் பார்த்தான். அந்தோ! என்ன கோரக் காக்ஷி! எலும்புங் கூடுமான ஒரு பிச்சைக்காரன், தனது மகா கொடிய பசியின் வேகத்துடன் அந்தச் சாப்பாட்டை எடுத்து லபக்கு லபக்கென்று போட்டுக்கொண்டு மென்றுகூட விழுங் காமல் அப்படியே விழுங்குவதைப் பார்த்ததும் முதலில் தாமோ தரனுக்கு இயற்கையாயுள்ள மனித சுபாவத்தின்படி பிரமாத மாகக் கோபம் வந்தது. முன்பின் யோசிக்காமலும் ஈவிரக்கமில் லாமலும் கண்மண்ணு தெரியாது பளார் என்று கன்னத்தில் அறைந்துவிட்டான்.

கால்வயிறு கஞ்சியைக்கண்டு அந்த ஆத்மாவுக்கு எத்தனை நாட்களாயிற்றோ! அவன் தன்னுடைய பிரக்ஞையை இழந்தவாறே சாப்பாட்டைத் தின்றுகொண்டிருக்கும்போது கன்னத்தில் பளார் பளார் என்று அடிகள் விழுந்ததும், தான் பூலோகத்தில்தான் இருப் பதாக எண்ணினனேயன்றி சாப்பிடுவதை நிறுத்தவில்லை; பாத்திரத் தையும் விடவில்லை.

ஆவலுடன் சாப்பிட்டபடியே, "அப்பனே! கன்னத்திலே அடிக்காதே! வாயிலே போட்ற சாதம் கீழே விழுந்துபோறது. முது கிலே அடி. ஒனக்கு வேணுங்கறமட்டும் அடி. நான் பண்றதப்புக்கு எத்தனை அடி வேணுமானலும் பொறுக்கிறேன். மகா கொடுமை யான அகோரப் பசியைமட்டும் என்னல் பொறுக்கவேமுடியலே! அதனலே இந்த காரியம் செய்துட்டேன்....இதோ ஆகிவிட்டது. இன்னும் இரண்டு உருண்டைதான் இருக்குது. அதையும் சாப்பிட்டு விட்றேன்"....என்று பரிதாபமும் துக்கமும் கலந்த தொனியில் கூறிய படியே மீண்டும் அவசர அவசரமாகச் சாப்பிட்டான்.

ஆத்திரத்தின் வேகத்தில் தாமோதரன் அந்த பரிதாபகரமான பிம்பத்தின் ஸ்வரூபமறியாமலும், அவனுடைய பசியின் வேதனையை

உணராமலும் அடித்துவிட்டானேயன்றி அடுத்த க்ஷணமே அந்த மனிதன் பேசுவதைக் கேட்டதும், சாப்பிடும் வேகத்தைப் பார்த்ததும் தாமோதரனின் தேகமே கிடுகிடென்று ஆடி நடுங்கியது. அவனை யறியாமலேயே கண்ணீர் தாரை தாரையாய் முட்டியது. "ஐயோ! அநியாயமாய் அடித்துவிட்டோமே!" என்று நெஞ்சில் வேதனை செய்து வதைக்கிறது.

கண்மூடித்தனமாகச் செய்துவிட்ட காரியத்திற்கு இனி வருந்தி என்ன பயன்! அந்த பிச்சைக்காரன் அவசர அவசரமாகச் சாப்பிடுவதால் சோறு தொண்டையில் அடைத்துக்கொண்டு விக்கல் வந்து தவித்தான். தாமோதரனால் இதைக்கண்டு சகிக்கமுடியாது போயிற்று. பிச்சைக்காரனின் கன்னம் புடைத்திருக்கும் கண்ருவியும் அவன் கண்ணில் பட்டதுதான் தாமதம். தாமோதரனின் உயிர் அப்படியே பறந்துபோவதுபோலிருந்தது.

கடவுள், பக்தர்களின் பரிசுத்தத்தைச் சோதிக்கும்பொருட்டு ஆண்டியாகவும், பிச்சைக்காரனாகவும், [illegible]காரனாகவும், யாசகனாகவும், சில சமயம் [illegible]யாகவும் தோன்றுவார் என்று தான் படித்துள்ள புத்தகங்களில் கண்ட விஷயங்களும் நினைவில் பளிச் சென்று தோன்றின.

'இத்தனை முரட்டுத்தனமாக அடித்தும் தன்னை அந்த பிச்சைக்காரன் பதிலுக்கு ஒரு வார்த்தைகூடத் திட்டாமல் முதுகில் அடிக்கும்படியாகக் கூறினானே! இந்த பொறுமையிலிருந்து இவனே ஒரு வேளை கடவுளாக இருப்பானோ!' என்கிற ஒரு[illegible]தமான பயமும், தன்னையறியாத நடுக்கலும் உண்டாயின.

உடனே எழுந்து பிச்சைக்காரனின் அருகில் சென்று அவனை வணங்கி, "அப்பா! ஏதோ புத்தியில்லாத நிலைமையில் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. 'மன்னித்தேன்' என்று உன்வாயினால் சொல்லு" என்று வணக்கமாயும், பயபக்தியுடனும் கூறியபடியே அவன் மார்பைத் தடவிக்கொடுத்தான்.

மாரடைத்து விக்கல் அதிகமாக வந்ததால் பேசமாட்டாது பிச்சைக்காரன் தவியாய்த் தவிப்பதைக் கண்ட தாமோதரன் எழுந்து ஓட்டமாக ஓடி கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவந்து அவனுக்கு வார்த்து குடிக்கவைத்து மார்பையும் முதுகையும் தடவியவாறு அவனைத் தன் தோள்மீது சாய்த்துக்கொண்டான்.

சில நிமிஷங்கள் சென்று பிச்சைக்காரனுக்கு நல்ல தெளிவும் சாதாரண நிலைமையும் உண்டாகியது. "அப்பா!...நீ மகாராஜனா நன்னாயிருக்கணும். உன் வாயில் மண்ணைப்போட்டு அந்த சோற்றை நான் தின்றது மாபெருங்குற்றமாயினும் என்னுடைய கோரமான பசியில் நான் பாவத்தைத் துணிந்துதான் செய்தேன்.

என் மனமறிய நான் ஒரு பாபமும் செய்தறியமாட்டேன். அதனால்தான் என்னை பகவான் இத்தனை சோதனைக்குள்ளாக்கிவிட்

டான். இத்தனைக்கும் காரணம் யார் தெரியுமா! அந்தப் படுபாவி. சண்டாளன். துரோகி....குலநாசகன்...ஹரிஹரன் என்கிற பாபிஷ்டி தான் தெரியுமா! நான் அந்த அக்ரமக்காரனுக்கு லஞ்சம் கொடுக்க வில்லை என்றதால் அநியாயமாய்க் குற்றம் செய்தவனுக்கு அனு கூலமாகத் தீர்ப்பை வழங்கிவிட்டு என்னைக் குற்றவாளியென்று தண்டித்துவிட்டான்.

அதில்தான் என் குடும்பம் சிதறிச் சீர்குலைந்து பயித்தியம் பிடித்துத் திண்டாடி இப்படி பிச்சைக்காரனாகத் திரிகிறேன். அவன் நாசமாய்ப்போக. அவன் குலம் சாம்பலாகிப்போக. என் வயிறு எரி வதுபோல் அவன் வயிறு எரிந்துபோக. அவன் நிர்மூலமாகிப்போக...

என்று சரமாரியாகப் பொழிந்துகொண்டுபோவதைக் கேட்ட தாமோதரனின் குடல் நடுங்கியது. ஏற்கெனவே ஹரிஹரன்மீது அவனுக்கிருந்த ஆத்திரமும் த்வேஷமும் பின்னும் அதிகரித்தன. "விலையிலாத மாணிக்கம் போன்றும், சொர்ணவிக்ரகம் போன்று முள்ள பெண்ணைத் தூக்கிக்கொடுத்துள்ள நம் குடும்பத்தையே சந்தி சிரிக்கும்படித் திண்டாடவிட்ட சண்டாளன் வேறு யாரைத்தான் வதைக்கமாட்டான். ஐயோ! இவன் வயிறெரிந்து இடும் சாபம் முற்றும் என் அருமை நித்யாவையும், என்னுருயிர் கண்மணி சுதா வையுமல்லவா தாக்கும்? ஐயையோ! அட கொலைபாதகா! இருந்து இருந்து கிளியைவளர்த்துப் பூனையின்கையில் கொடுப்பதுபோல் என் நித்யாவைக் கொடுத்துவிட்டோமே! மகா கொடும்பாவியாகிய உன் வயிற்றில் மாணிக்கம்போன்ற ஸுதா எப்படித்தான் பிறந் தாளோ! என் ரத்தம் கொதிக்கின்றதே" என்று தனக்குள் விபரீதமாக எண்ணி அப்படியே இடிந்துபோயிருந்தான்.

இதைக்கண்ட பிச்சைக்காரன் கடகடவென்று ஒரு சிரிப்புச் சிரித்தான். "தம்பீ! நான் ஒரு பயித்தியம் ஏதோ உளறுகிறேன் என்று பார்த்தாயா! நீ எந்த ஆண்டவனை நம்பியிருக்கிறாயோ, அதே ஆண்டவன்பேரில் ஆணையாக நான் சொல்வது எல்லாம் உண்மை. அந்த ஹரிஹரனைக் கொலை செய்துவிடவும் துணிந்தேன் தம்பீ! ஆனால் கொலைபாதகத்தின் பயங்கரத்தை எண்ணிப் பேசா திருந்தேன். அவனுக்கு ஸுதா என்றொரு பெண்ணிருக்கிறது. அது வெகு அழகாயும், புத்திசாலியாயுமிருக்கும். "அதைத் தூக்கிக் கொண்டு போய்விடலாமா! குழந்தைகள் இல்லாது வருந்தும் தாசிக்கு அதை விற்றுப் பணமாக்கிவிடலாமா! அந்த சண்டாளனின் வயிறெரியச் செய்யலாமா!" என்று எண்ணினேன்.

உத்தமமான குணமுடைய குழந்தையை தாசிக்கு விற்றால் அது அநியாயமாய் விபசாரத்திலிறங்க நேருமே! அந்த விபசாரச் சண்டாளத்தின் பாதகம் என்னையல்லவா சேரும்" என்று பயந்து அதற்கும் பேசாதிருந்துவிட்டேன்.

நாலு சோதாக்களைவிட்டு அவனை நன்ருக அடித்துவிடலாமா என்று பார்த்தேன். அந்த காரியத்தில் நானே அகப்பட்டுக்கொள்ள நேர்ந்தால் முதலுக்கே மோசமாகிவிடும் என்று எண்ணிப் பேசா திருந்தேன். அவனுடைய மனைவியை துராக்ருதம் செய்துவிடவும் எண்ணினேன். ஆனால் அதுவும் துணியவில்லை.

தம்பீ! எந்தவிதம் போவதற்கும் என் கோழைமனம் இடந்தர வில்லை. 'ஆண்டவனே! நீயே பார்த்து அந்த சண்டாளனுக்குக் கூலிகொடு' என்று விட்டுவிட்டேன். அதான் என்கதி இப்படியா யிற்று. நானும் அவனுக்குச் சரியாக அக்ரமம் செய்திருந்தால் நன்ருகத்தானிருந்திருப்பேன்'' என்று மூச்சுவிடாமல், வயிற் றெரிச்சலுடன் கூறினன்.

இதைக்கேட்ட தாமோதரனுக்கு என்ன பதில் சொல்வ தென்றே தெரியாது திகைத்தான். இவனைப்போல் அந்தப் படு பாவியினுல் கெட்டுப்போனவர்கள் இன்னும் எத்தனை பெயர்களிருக் கிருர்களோ! என்னென்ன சாபமிடுகிருர்களோ! ஆண்டவனே! இந்த வயிறெரிந்த மனிதர்களின் சாபம் நித்யாவுக்கும், சுதாவுக்கும் தாக்காது காப்பாற்றவேண்டும்'' என்று இதயபூர்வமாக வேண்டி மௌனமாகவே இருந்தான்.

இதற்குள் உண்ட களைப்பினுல் பிச்சைக்காரன் கண்ணயர்ந்து விட்டதை அவன் விடும் குறட்டை நன்கு எடுத்துக் காட்டியது. "நிர்ப்பாக்ய மனிதனை நாமும் அடித்துவிட்டோமே! என்கிற எண்ணம்மட்டும் தாமோதரனின் நெஞ்சைவிட்டுப் போகவேஇல்லை. அவனை திடும்! திடும்! என்று அவ்வெண்ணத்தின் அதிர்ச்சி ஆட்டிக் கொண்டே இருந்தது.

ஈயும், எறும்பும் அந்த பிச்சைக்காரனைப் பாதிக்காவண்ணம் அவன் நிம்மதியாய் தூங்கும்பொருட்டு அவைகளை ஓட்டியவாறு உட்கார்ந்திருந்தான். பிச்சைக்காரனும் தேகம் தெரியாதுஆனந்த நித்திரையில் ஆழ்ந்தான். அவன் நிம்மதியாகத் தூங்குவதற்காவது தான் உதவியாயிருக்கிருேமேயென்ற ஒரு சிறிய ஆனந்தம் தாமோ தரனின் உள்ளத்தில் தவழ்ந்தது.

30

மணி டாங் டாங்கென்று இரண்டு அடித்தது. "இன்னும் தாமோ தரன் வரவில்லையே! வெய்யிலின் வெப்பத்தில் எங்கேனும் சுருண்டு விழுந்துவிட்டானே!'' என்று ஞானத்திற்கு பயம் எடுத் துக்கொண்டது. மூர்த்தி பசியினுல் களைத்துப்போனதோடு வேதனை யும் பாதித்தவாறு "தாமு வந்தானு! வந்தானு!'' என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

'இன்னும் வரவில்லையே!' என்று பதிலளித்தபடியே உள்ளுக்கும் வெளிக்கும் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். மணி ஏறுகிறதே யன்றி தாமோதரனைக் காணவில்லை. ஞானத்திற்கு மனவேதனை அதிகரித்தது. 'எங்கேயோ சுருண்டு விழுந்துவிட்டான்' என்றே அவள் உள்ளம் தீர்மானித்தது.

அதற்குமேல் இருக்கைகொள்ளவில்லை. அருமையான ஒரு பெண்ணை அந்த கொலைபாதகனுக்குக் கொடுத்து அதனால் தான் வாரிக் கட்டிக்கொண்ட பலன் போதும்; போதும் என்றாகியது, எஞ்சியுள்ள மகனாவது நன்றாயிருக்கவேண்டுமே! என்கிற திகில் பிடித்துக்கொண்டதால்தவித்தவாறு வீதியிலேயேநின்று பார்த்தாள்.

போவோர் வருவோர்களையெல்லாம் விசாரித்தாள். மாதவரம் வாங்கப்போன பையன் என்றால் யார் கண்டது? வெய்யிலின் கொடுமையில் வீதியில் நின்று பதில் பேசவும் முடியாது போய்விடுவதைக்கண்டு ஞானம் பின்னும் தவித்தாள்.

புத்திரவாத்ஸல்யத்தின் வேகத்தில் அவளுடைய பசிகூட பறந்தது. யாரைப் பார்த்தாலும் தாமோதரனைப்போலவே தோன்றியது. பித்துபிடித்தவள்போல் அந்தகனிடமும் சொல்லாமல் விடுவிடென்று வீதியில் போய்விட்டாள். காலும், தலையும் நெருப்பில் பொசுங்குவதுபோல் காய்கிறது. நடக்கமுடியவில்லை. சில வீடுகளுக்குச் சென்று "இங்கு மாதவரம் வாங்க ஒரு பையன் வந்தானும்மா?" என்று கேட்டாள். ஒரு வீட்டு ராணி "ஓகோ! பையனை முன்னே அனுப்பிவிட்டுப் பின்னால் நீ தேடி வருவதுபோல் வந்து பிச்சை வாங்கஇது ஒரு புதிய வழியா! போம்மா போ!" என்று சிடுசிடென்று சீறிவிழுந்தாள்.

ஞானத்தினுடைய மனோவேதனையில் இந்த வார்த்தைகள் காதிலேயே படவில்லை. ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொருவிதமாக வந்த பதிலைக்கூடலக்ஷியஞ்செய்யாமல் ஞானம்போய்க்கொண்டிருந்தாள்.

ஒரு தெருவில் பிணத்தைத் தூக்கிக்கொண்டு எதிரில் சிலர் கும்பலாக வருவதைக்கூட கவனியாமல் எதிரில் முட்டிக்கொள்வது போல் போகும் ஞானம், பிணம் வருகிறது என்று தெரிந்தபிறகு சற்று ஒதுங்கிக்கொண்டாள்.

"உம். யாரோ பாவம்! நிம்மதி உலகத்திற்கு ஆனந்த சவாரி செய்கிறார்கள். என் காலம் முடியக்கூடாதா! நானும் இக்கவலைகளைவிட்டுச் சந்தோஷமாகப் போகக்கூடாதா!" என்று நினைத்தபடியே உற்றுக் கவனித்தாள்.

பிணத்தைத் தூக்கும் நால்வரில் தாமோதரனும் ஒருவனாயிருப்பதைக்கண்டு ஞானம் அலறினாள். "ஐயையோ! தாமுவா பிணந் தூக்குகிறான்!....தாமூ!...தாமூ!"...என்று கூவிக்கொண்டே பின்னால் ஓடினாள். வீதியில் போகும் ஜனங்கள் 'செத்தவீட்டு மனுஷி இவள்; அதனால்தான் கதறுகிறாள்' என்று நினைத்துவிட்டார்கள்.

பிணந்தூக்கிச் செல்வதில் தேர்ச்சிபெற்றவர்களாயின் ஞானத்தின் கண்ணில்பட்டே இருக்கமாட்டார்கள். நால்வரும் புதிதாகையினால் சற்று நிதானமாகச் சென்றார்களெனினும் இவள் பின்னால் வருவதற்குள் தடதடவென்று போய்விட்டார்கள்.

ஞானத்தின் இதயம் வெடித்துவிடும்போலாகியது. "பிணந்தூக்கியா இந்த வயிற்றைக் காப்பாற்றுகிறான்! என்னருமைக்கண்மணி பிணமா தூக்கிச் செல்கிறான்?...மூன்றாந்தாரமாகப் பெண்ணைக்கொடுத்து நான் அடைந்த பலன் இதுதானா! என் சக்திக்குத் தக்க ஏழை ஒருவனுக்கு என் கண்மணியைக் கொடுத்திருந்தால் அவன் எங்களை இத்தகைய பிணந் தூக்கிப் பிழைக்கவும், வயிறெரியவும் விட்டிருக்கமாட்டானல்லவா! எப்படியாவது ஒரு பத்துரூபாய் சம்பாதிக்கும்படிக்குச் செய்துவிடுவான்" என்று நம்பியதற்கு என் மகனைப் பிணந் தூக்கி என்கிற பட்டத்தைப் பெற்று வாழவா செய்தான்?...ஐயோ! என்னால் சகிக்கமுடியவில்லையே!...என்று தனக்குள் கதறினாள்; விம்மினாள்.

அப்படியே துவண்டு வீட்டிற்குவந்தாள். "இனி நான் 5 நிமிஷமும் வீணாக உட்கார்ந்திருக்கக்கூடாது. சமையல் வேலைக்கு உடனே ஒப்புக்கொள்ளவேண்டும். என் குழந்தை மாதவரம் எடுப்பதும் பிணந் தூக்குவதும் இளைப்பமில்லை. நான் சமையல் செய்யப்போவது தானா இளைப்பம்?" என்று ஒரு தீவிரமான வைராக்யம் உண்டாகியதால் அதேவேகத்தில் வீடுவீடாய் ஏறி சமையலுக்கு ஆள் வேண்டுமா?" என்று கேட்டாள்.

சிலர் வேண்டாமென்றும், சிலர் பிறகு சொல்வதாயும், சிலர் சம்பளம் வெகு குறைவாகப் பேசியும், சிலர் சாப்பாடு போடாமல் மாதம் 5 ரூபாய்மட்டும் கொடுப்பதாகவும் கூறியதில் மனது முறிந்து வந்துவிட்டாள்.

"தாமோதரன் வந்தானா?" என்று மூர்த்தி கேட்டுக்கொண்டே இருந்தான். ஞானம் சோர்ந்த த்வனியில் 'இன்னும் இல்லை' என்று மட்டும் கூறினாள். அதே சமயம் தாமோதரன் ஒரு மூட்டை அரிசி, பருப்பு, காய்கறி, உப்பு, புளி, விறகு, எண்ணெய், நெய் முதலிய சாமான்கள் வாங்கிக்கொண்டு சந்தோஷத்துடன் வந்து "அம்மா! அம்மா! மன்னிக்கணும். கோபிக்காதே. இதோ சாமான்களிருக்கின்றன. உன்னுடைய அருமையான சமையலைச் சாப்பிட்டு எத்தனையோ யுகங்களாகிவிட்டன. சமையல் பண்ணம்மா அம்மா! மாதவரத்தில் காந்தலும், கருகலும், வண்டலும், சுண்டலும் தின்று நாக்கு செத்துவிட்டதம்மா!" என்று பரிதாபமாகக் கூறினான்.

செக்கச் செவேலென்றிருக்கும் அவன் தோள்கள் பிணந்தூக்கியதால் பின்னும் குங்குமம்போல் சிவந்திருப்பதைக்கண்டு ஞானத்தின் மனது தவித்தது. "தாமு! இதென்ன வேலை! என்னால் சகிக்க முடியவில்லையே! இப்படியுமா உன் புத்தி தோன்றியது?" என்றாள்.

தாமு :—அம்மா! வீண் கோபம் வேண்டாம். அக்ரமமான காரியங்கள் நீங்கலாக வேறு எந்த காரியமும் தாராளமாகச் செய்யலாம். அதில் ஒரு ஹீனயமும் இல்லை. இன்று மாதவரத்தில் கிடைத்த கொஞ்ச சாப்பாடும் ஒரு பிச்சைக்காரனின் பசியாற உதவியது. பிறகு என்ன செய்வதென்று ஏங்கித் தவிக்கும்போது "பிணந் தூக்கவருகிறீயா! 10 ரூபாய் தருகிறார்களாம்" என்று ஒருவன் வந்து கேட்டான்.

"10 ரூபாயா!"....என்று வியந்தேன். ஒத்தை ரூபாயைக் கண்ணால் கண்டு எத்தனை நாட்களாகியது? பத்து ரூபாய் என்றால் நம்பவேமுடியாது திகைத்தேன். ஒரு கிழவி இறந்துவிட்டதாயும் அவளை ஏதோ குற்றத்திற்காக ஜாதிப்ரஷ்டம் செய்திருப்பதாயும், அதனால் கட்டுப்பாடாக எல்லோரும் விலகி இருப்பதாயும், புதிய மனிதர்கள் வந்து தூக்கினால்ஆளுக்குப் பத்து ரூபாய் தருவதாயும்சொன்னார்கள்.

அவ்வளவுதான். என் முன்னறி தெய்வங்களின் போஷணைக்காக ஓடினேன். பத்து ரூபாய் சொளை சொளையாய்க் கிடைத்தது. இதோ சாமான்கள் வாங்கி வந்தேன். 'நாய்விற்ற காசு குலைக்குமா!' என்பார்கள். அதுபோல் பிணந்தூக்கிய காசு நாறுமா என்ன? ஒன்றுமில்லை. நீ கவலைப்படாதே. நான் எந்த தொழிலுக்கும் துணிந்துவிட்டேன். ஆகட்டம்மா! சமையல் பண்ணு" என்று தானே முன்கூட்டி அடுப்பு மூட்டப்போனான்.

இதைக்கேட்ட மூர்த்தியின் உள்ளமும் துடித்தது. "என்ன! பிணந்தூக்கிச் சம்பாதித்தாயா! உம்...எல்லாம் நான்செய்தகர்மமேயன்றி வேறொன்றுமில்லை" என்று வருத்தப்பட்டான்.

ஞானம் மறுபேச்சின்றி சமையல் செய்து இருவருக்கும் போட்டுத் தானும் சாப்பிட்டாள். இத்தனை பரிபவத்திற்கும் காரணம் அந்த ஹரிஹரன்தானே என்று நினைக்கும்போது எல்லோருக்கும் உள்ளம் புழுங்கியது. இனி எது செய்துதான் என்ன பயன்?

மீண்டும் சில தினங்கள் சென்றன. ஞானம் ஒரு வீட்டில் சமையல் செய்ய அமர்ந்தாள். தாமோதரனுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. அலைந்துகொண்டே இருந்தான். தாமோதரனின் மனது கஷ்டத்தையடைந்து விசனம் அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய வெறுப்பு முற்றும் சுதாவின் மீதே பாய்ந்தது. 'அவளை நான் நேசித்ததனால் தானே இந்தகதி உண்டாகியது' என்கிற ஒரு நூதன த்வேஷபுத்தி ஒருபுறம் தோன்றி வதைத்தது.

56-வது மோகினி பிரசுரம் **சுடர்விளக்கு** ருசிகரமான 5 சிறு கதைகள் அடங்கியது. விலை 6 அணா

விடுமுறைகாலத்திலாவது தன் தாயாரிடம் சென்று இன்புறலாமென்று எண்ணியிருந்த சுதாவுக்கு வந்த கடிதம் அவள் இடுப்பை உடைத்ததுபோலாயிற்று. "பெற்ற பிதாவா இத்தகைய கடிதத்தை எழுதியிருக்கிறார்! நான் வருவதால் அவருக்கென்ன கஷ்டமோ தெரியவில்லையே! பெற்ற பெண்ணின் வருகையைக்கூட இப்படி வெறுக்கும் நிலைமையிலா அவர் மனம் மாறியது! அடடா! என்னை அடியோடு பிரிப்பதற்காகச் செய்துள்ள சூழ்ச்சியே யன்றி வேறில்லை. உம். சிறைவாஸத்திற்கு ஒப்பாகிய இந்தயிடத்தில் என்னை படிப்புக்காகவா சேர்த்தார்கள்? இல்லை; இல்லை. என்னருமை அன்னையையும், தம்பி, தங்கையையும் பிரிந்து வருந்துவதற்காகவே இப்படிச் செய்திருக்கிறார்கள். மற்ற பெண்களெல்லாம் எத்தனை சந்தோஷமாக தம் தம் ஊருக்குப் போகிறார்கள்? நான் மட்டுமா கஷ்டப்படவேண்டும்? என் தாயாரைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் என்னை வதைக்கின்றதே! நான் எப்போது போய் பார்ப்பேன்!" என்று தனக்குள் எண்ணிக் கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கையில் ஹாஸ்டலின் தலைவி அங்கு வந்தாள்.

ஸுதா அழுதுகொண்டிருப்பதைக் கண்டு ஒரு மாதிரி நகைத்துக்கொண்டே "என்ன ஸுதா! என் அழுகிறாய்? ஊருக்குப் போகவில்லையே என்று வருத்தமா! இதோ உங்கப்பா கடிதம் எழுதி 50 ரூபாய் பணமும் அனுப்பியிருக்கிறார். நீ எந்தெந்த ஸினிமா பார்க்கவேண்டுமென்றாலும் சரி. பாட்டுக் கச்சேரிகள் கேட்க வேண்டுமாயினும் சரி. ட்ராமா பார்க்கப் பிரியப்பட்டாலும் சரி. நான் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். நீ சந்தோஷமாயிருக்கலாம். இதோ பாரு, சுதா! உன்னுடைய ஆனந்தத்திற்கும் நன்மைக்கும் உங்கப்பா பாடுபடுவாரேயன்றி உன்னை வேண்டுமென்று வர வேண்டாமெனச் சொல்வாரா! உங்க சிறிய தாயார் மகா மோசமானவளாம். பொல்லாதவளாம். உன்னைச் சித்திரவதை செய்வாளாம். அதோடு அவளும் நடத்தையில்...என்று சொல்லிக்கொண்டே போவதைக் கேட்ட சுதாவின் ஆத்திரம் பொங்கியது. ஹாஸ்டலின் தலைவி என்பதைக்கூட மறந்துபோய் 'நிறுத்துங்கள். என் அன்னையைப்பற்றிய விஷயம் என்னைவிட வேறு யாருக்கும் தெரியாது. ஒருவரும் அபிப்பிராயம்கொடுக்கவேண்டாம்' என்று கூறிவிட்டாள்.

தலைவி உண்மையில் திடுக்கிட்டாள். ஆத்திரமும் பொங்கியது. சுதாவை விழித்துப் பார்த்தபடியே, "ஓகோ! உன்னுடைய அன்னையைப்பற்றி ஒன்றும் நானகச் சொல்லிவிடவில்லை. இதோ உன் தகப்பனுரே கைப்பட கடிதம் எழுதியிருக்கிறார். பார்த்துக் கொள்ளு. இனி இம்மாதிரி துடுக்காக நடக்காதே" என்று மிரட்டிக் கூறிப் பின் சென்றுவிட்டாள்.

தன் தகப்பனாரின் கடிதத்தை வாசித்துப் பார்த்த சுதாவின் உடம்பெபற்றி எரிவதுபோலிருந்தது. "நெருப்புக்கும் நித்யாவுக்கும் உவமை கூறலாம். அத்தகைய பரிசுத்தவதியைக் கிழட்டுப் பிணம் பெண்டாக அடைந்த பெருமையை மறந்து அவள்மீது குறை கூறியிருப்பதைக் கடவுள்தான் சகிப்பாரா! ஐயையோ! இது என் அன்னையின் காதில் பட்டால் அவள் தற்கொலையல்லவா செய்துகொள்வாள். என்னை வேண்டுமென்று சிறையிலடைத்திருப்பதுபோல் செய்திருக்கிறார்களே! நான் எந்தவிதம் இதை என் அன்னைக்கு எடுத்துக் காட்டுவேன்? என் அண்ணனே இம்மாதிரி சதி ஏதேனும் செய்ய எண்ணியிருக்கிறானே! ஒன்றும் தெரியவில்லையே!" என்று மனது உருகித் துடித்தாள்.

அவளுக்கு மனது சமாதானமே அடையாததால் ஒரு கேளிக்கைக்கும் தான் வரவில்லை என்று கண்டிப்பாய்க் கூறினாள். இன்னும் மற்றப் பெண்கள் சுதாவை ஒரு நாடகத்திற்கு வரும்படிக்குத் தொணப்பினார்கள். சுதாவுக்குப் பிடிக்கவேயில்லையாதலால் மறுத்தாள். அந்த பெண்கள் சுதாவை விடாது, "எப்படியோ உபதேசம் செய்து அவளைக் கலைத்து எப்படியும் ஒரு நாடகத்திற்காவது கும்பலாகப் போகவேண்டுமென்று "இது சாதாரண மனிதர்கள் ஆடும் நாடகமில்லை. நம்முடைய வாத்தியார்கள் சேர்ந்து வைத்திருக்கும் சங்கத்தின் நாடகமாகையால் அதற்குப்போகாவிட்டால் இந்த முறை பரீக்ஷையில் கட்டாயம் சுன்னந்தான் போடுவார்கள். இந்த ரகஸியம் அறிந்திருப்பதால்தான் உனக்குச் சொல்கிறோம். ஏற்கெனவே கவலையுடனிருக்கும் நீ நன்றாகப் படித்திருந்தாலும் பாஸ் டபாஸாகி விட்டால் இன்னும் கஷ்டம். எழுந்துவா!" என்று வற்புறுத்தினார்கள்.

தலைவிதியே என்று சுதா ஒப்புக்கொண்டு எழுந்தாள். 5 ரூபாய் டிக்கட்டுக்கு வாங்கிக்கொண்டு கிளம்பினார்கள். ஊருக்குப் போகாதவர்கள் சுமார் 50 பேர்களுக்குமேல் ஆஸ்டலிலேயே இருந்தார்கள். அவர்களில் பெரும்பாகத்தினர்கள் கிளம்பினார்கள்.

5 ரூபாய் வாங்க சக்தியில்லாதவர்கள் ஒரு தனி வகுப்பாகச் சென்றார்கள். 5 ரூபாய் வாங்கியவர்கள் சுமார் 15 பேர்கள் ஒரு வகுப்பாய் சென்றார்கள்.

சுதாவுக்கு அவர்களில் யாரும் அதிகமான சினேகமே இல்லை. யமுனா என்கிற ஒரே பெண்தான் சினேகம் என்று சொல்லிக்கொள்ளும் முறையில் பேசிப் பழகியவள். அவளும் சுதாவும் ஒன்றாக உட்கார்ந்தார்கள்.

ஹாஸ்டல் பெண்கள் வந்ததும் வாலண்டியராக வேலை செய்யும் சில யுவர்கள் ஓட்டமாக வந்து பல்லிளித்து கும்பிடுபோட்டு 'சோடா வேணுமா! கலர் வேண்டுமா! காப்பி, பக்ஷணம், சாக்லட் எதுவேண்டும்?' என்றுகேட்டு உபசாரம் செய்வதுசொல்லமுடியாது.

சில பெண்களுக்குக் கேட்காமலேயே கொண்டும் கொடுத்து விட்டார்கள். அங்கு வந்தால் வாங்கித் தின்ருல்தான் கவுரவம் என்று எண்ணித் தாமாகவே சிலர் ஒன்றுக்கு மூன்று விலை கொடுத்து வாங்கிக் குடிப்பதை ஒரு பெருமையாகச் செய்யும்போது, இந்த பெண்களை இத்தனை உபசாரத்துடன் கேட்கும்போது குடிக்காதிருப் பார்களா! ஆளுக்கொன்ருக வரவழைத்துக்கொண்டார்கள். சுதா வேண்டாமென்று எத்தனை கூறியும் கேட்காது மற்றவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். சுதா பல்லைக் கடித்துக்கொண்டு சாப்பிட ப்ரயத் தனப்பட்டும் அவளுக்கு இவைகள் ஒன்றும் மனத்திற்குப் பிடிக் காததால் அப்படியே கொடுத்துவிட்டாள்.

பழங்காலத்து மோஸ்தராகவே ஆண்பிள்ளை பெண்பிள்ளை வேஷம் போட்டுக்கொண்டு தனது கர்தப சாரீரத்தினுல் பாடியும் பேசியும், ஸ்தூலம் போன்றும் பெரிய ஜோடுதவலையைப்போன் றுள்ள இடுப்பை அசைத்தும் ஆட்டியும் நடப்பதும் பார்க்கப் பரம விகாரமாயிருந்தது.

ஏற்கெனவே இருக்கும் தலைநோயைக் கிளறுவதாகவிருக்கி றதேயன்றி நாடகத்தில் அவள் மனது செல்லவேஇல்லை. "எப்போது முடியப்போகிறது" என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். நாட கம் முடிந்ததும் எல்லோரும் எழுந்தார்கள்.

அச்சமயம் வாடி சோர்ந்து மெலிந்துபோயிருந்த ஒரு வாலிபன் சுதாவின் முன்புவந்து "அம்மணீ! சௌக்கியமா!" என்ருன். சுதா வுக்கு ஒன்றுமே தெரியாது விழித்தாள். "நீங்கள் யாரு! எனக்குத் தெரியவில்லையே" என்று வியப்புடன் கேட்டாள்.

'என்னை உனக்குத் தெரிய நியாயமில்லை. என்னை நீ பார்த்துகூட இருக்கமாட்டாய். ஆனுல், நான் உன்னை அனேகதரம் பார்த்திருக் கிறேன். உங்கள் குடும்பத்து விஷயம் பூராவும் எனக்குத் தெரியும். உன் தகப்பனுரைப்பற்றியும், பிரண்டைப்பாட்டியைப்பற்றியும் நான் வெகு நன்ருக அறிவேன். ஆனுல் எதையறிந்தும் ஒன்றும் உபகாரம் செய்யக்கூடிய நிலைமையில் கடவுள் என்னை வைக்கவில்லை. என் தலை விதி என்னை எப்படி எப்படியோ கொண்டுபோகிறது.

சரி...அனுவசியமான புராணத்தை வளர்த்தி உன் மனத்தை நான் புண்படுத்தவில்லை. நான் தற்செயலாக என் சொந்தக்காரர் வீட் டிற்குச் சென்றபோது தாமோதரன், அங்கு மாதவரம் எடுப்பதைப் பார்த்தேன். அவனுடைய நிலைமையைக் கூறவேமுடியாது. அவ னுக்கு உங்க வீட்டு விஷயம் எதுவுமே தெரியாதாம். உன்னைப்பற்றி முதலே தெரியவில்லையாம். உன்னை எங்கேனும் சந்தித்தால் உன்னை விசாரித்ததாகச் சொல்லச்சொன்னுன். நான் இன்று தற்செயலாய் உன்னைப் பார்த்ததால் அவன் சொல்லியதைத் தெரிவித்தேன். நான் வருகிறேன்" என்று கூறியதைக் கேட்கும்போது சுதாவுக்குக் கண் ணீர் மளமளவென்று வந்துவிட்டது. பேசவேமுடியாது தவித்தாள்.

மெல்ல சமாதானம் செய்துகொண்டு, "சார்! இத்தனை தகவலாக விஷயம் சொல்லும் தாங்கள் யாரோ தெரியவில்லையே! உங்கள் பேரென்ன? உங்கள் ஊர் எது? அவர் இருக்கும் விலாசம் எது?" என்று கேட்டாள்.

"அம்மணீ! நான் யாராகவிருந்தால் என்ன? நான் உங்களிருவருடைய பிரியத்தின் மேன்மையை அறிந்த அனுகூலனேயன்றி சத்ருவல்ல. என்பெயர் கோபாலன்; கோபூ என்று அழைப்பார்கள். தாமோதரன் தன் விலாஸத்தைச் சொல்லவேண்டாமென்றும், கடிதம் போடவேண்டாம் என்றும் கட்டாயம் சொல்லும்படிச் சொன்னான். ஆகையால் அதைத் தெரிவிக்கமுடியாததற்கு வருந்துகிறேன். நான் போய்வருகிறேன்" என்று கூறி, மாயமாய் மறைந்துவிட்டான்.

சுதாவின் மனத்துடிப்பைக் கூறவேண்டுமா! அப்படியே துவண்டுபோய் கீழே விழுந்துவிடுபவள்போலாய்விட்டாள். 'என்ன காலக்கொடுமை! மாதவரம் எடுக்கிறாரா? பவதிபிக்ஷாந்தேஹி என்று வீடுவீடாய் பிச்சைக்குப் போகிறாரா! ஐயோ! இந்தமாதிரி ஒரு குடும்பத்தைச் சிதறவடித்து வேடிக்கையா பார்க்கிறார் அப்பா!... இந்த விஷயம் காதில் கேட்டால் நித்யாவின் இதயம் எப்படித் தவிக்கும்?'...என்று எண்ணி ஒரேயடியாய் இடிந்துபோய் தன்னிறையழிந்து நடைச்சவம்போல் சென்றாள். அவள் வேதனையின் எல்லையை அவளாலேயே அறியமுடியாதுபோயிற்று.

ஹாஸ்டலுக்கு எப்படி வந்தாளோ! என்ன செய்தாளோ! கட்டிலில் படுத்தவள் தலையே நிமிரவில்லை. தன்னால்தானே அவருக்கு இந்த கதி ஏற்பட்டது என்று நினைக்கும்போது அவள் இதயம் வெடித்துவிடும்போலாகியது.

32

என்று தன் பெற்றோர்களை வீட்டைவிட்டு அனுப்பினாளோ அன்றோடு நித்யாவின் சந்தோஷமும், தெம்பும் அவள் இதயத்தை விட்டு விலகவாரம்பித்தன. பிறகு தாமோதரன், சுதா இருவரும் சென்றபிறகு மேற்குறித்தவைகள் அடியோடு போய்விட்டனவென்று தாராளமாகக் கூறலாம். பட்டினத்தார் பாடலின்மூலம் உண்டாகிய விபரீத மாறுதலுக்குப்பிறகு நித்யா முற்றிலும் மாறிப் போய் விரக்திப் பிண்டமாகக் காணப்பட்டாள்.

வீட்டிலிருப்பவர்கள் ஹரிஹரன் உள்பட, ஏதேனும் கேட்டால்தான் பதில் சொல்வதேயன்றி தானாக ஒருவரிடமும் ஒரு பேச்சுக்கூட பேசுவதேயில்லை. மெஷின்போல் வேலைகளைமட்டும் செய்வதும், மிச்ச நேரத்தில் பகவன்னாமாவைப் பஜிப்பதுமாகவிருந்தாள்,

குழந்தைகளிடங்கூட அதிகம் பேசுவது கிடையாது. சதா இப்படி உட்கார்ந்திருந்தால் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று ஹரிஹரனே சில சமயம் பயப்பட்டு அவளை சினிமாவுக்கும் பாட்டுக் கச்சேரிகளுக்கும் அழைத்துச்சென்று புத்தியை மாற்ற நினைத்தான்.

நித்யாவுக்கு அது பிடிக்கவில்லையென்றாலும் நடை பொம்மை போல் அவன் பின்னோடு போய், விதியே என்று உட்கார்ந்திருந்து வருவாள். வரமாட்டேனென்றாலும் அதற்கும் சண்டை நடக்கு மாதலால் அவள் தனக்காக என்பதை அடியோடு விட்டுவிட்டதனால் உலகத்தில் எதைப்பார்த்தாலும் வெறுப்பாயும், மனக் கசப்பாயுமிருந்தது.

சுதா லீவுக்கு வருவாள் என்று முற்றும் நம்பி ஆவலோடு எதிர்பார்த்திருந்ததற்கு நேர்மாறான செய்தியையே நித்யாவுக்கு ஹரிஹரன் கொடுத்தான். அதாவது சுதாவுக்கு இங்கு வருவதற்கு பிடிக்கவில்லை என்றும், அங்கு தன்மீது எல்லோரும் ப்ரியமாக இருப்பதாயும், ஆனந்தமாய் பொழுதுபோக்குவதற்கு அனேக விநோதங்கள் இருப்பதாயும், தான் வரவில்லை என்றும், கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்லிவிட்டான்.

அதோடு மட்டும் நிறுத்தாமல், பச்சைக் குழந்தைக்கு மனத்தை முறியடிக்கும்பொருட்டு நித்யா பட்டினத்தார் பாடல் சொல்லிக் கொடுத்தது தனக்குப் பிடிக்கவே இல்லை என்றும், அங்கு வந்தால் தாமோதரனைப்பற்றி நித்யா நினைவுபடுத்துவாள் என்றும், அதற்காகவே அங்கு வருவதற்குப் பிடிக்கவில்லை என்றுகூட எழுதியிருப்பதாகவும் ஒரு வெடிகுண்டை வீசினான்.

இம்மாதிரி சொன்னால் சுதாவிடம் இவளுக்குப் பற்று விட்டு விடும் என்றும், சுதாவும் இவளிடம் வித்யாஸமாகவிருப்பாள் என்றும் நினைத்தான். ஆனால் இந்த விபரீதமான கட்டுக்கதையைக்கேட்டு அன்பிற்கு அடிமையாகிய உள்ளம் என்ன தவிக்கும், எப்படி தத்தளிக்கும் என்பது இந்த அன்பு சூன்யனுக்கு எப்படித் தெரியும்.

'இப்படியா என் கண்மணி சுதா எழுதியிருப்பாள்?' என்கிற கவலை எனும்புருக்கி நோய்போல் நித்யாவை உருக்கவாரம்பித்தது. "இருக்காது. சுதா ஒருபோதும் இம்மாதிரி எழுதியிருக்கவேமாட்டாள். இது இவர்கள் செய்த சூழ்ச்சிதான்" என்றும் சில சமயம் நினைப்பாள். அப்படி இருந்தால் லீவுக்கு வராமலிருப்பானேன். உம். என் விதி. நான் ஏன் இந்த பாழும் ஜென்மம் எடுக்கவேண்டும்? எடுக்கத்தான் செய்தானே! ஆயுளையாவது ஏன் சுருக்கிப்போட்டிருக்கக்கூடாது?" என்று நினைத்துப் புழுங்கினாள்.

எத்தனைதான் விரக்தியுடன் தன் பெற்றோர்களைப்பற்றி நினைக்கக்கூடாது என்று வைராக்யம் பாராட்டினாலும் பாசிபோல் அவள் நெஞ்சில் அந்த எண்ணம் படர்ந்து பின்னும் வருத்தியதால் பட்டினியாயும் பசியாயும், அவர்கள் தவிக்கும்போது தான் மட்டும்

இப்படி எல்லாவித பலகாரங்களுடன் சாப்பிடுவதா என்று நினைக்கும்போது அவளால் சகிக்கமுடியாத விசனம் பொங்கி வரும். சாப்பாட்டையே வெறுத்தாள். அதனால் இன்னும் பலவீனமும் இளைப்பும் உண்டாகி அவளை முற்றிலும் நோயாளிபோல் காணச்செய்தது.

யாரேனும் ஏழைகள் வந்து யாசகம் என்று கேட்டால் மனந்தாளாது தன் புடவைகள், ரவிக்கைகள் முதலியவற்றைக் கொடுத்தனுப்புவதைக் கண்ட பிறண்டைபாட்டி இவைகளையும் தன் மகனுடன் கலகம்செய்து கொடுத்ததோடு, "இப்படியே நகைகளையும்கூட தூக்கிக்கொடுத்துவிட்டால் என்ன செய்வதடா! மூத்தாள் பசங்கள் மூதேவியானல் அவளுக்கு மிக்க சந்தோஷந்தானே! அதனால்தான் இப்படிச் செய்கிறாள். நகைகள் ஜாக்ரதையப்பா! கேவலம் வீட்டில் இருக்கும் பொருப்பாளி இம்மாதிரி சன்யாசிபோலிருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லை. தரித்திரத்தில் பிறந்தும் நல்ல சம்பத்தில் துளையும் அதிர்ஷ்டமிருக்கையில் அவள் போடும் வேஷம் கொஞ்சமும் நன்றாகவே இல்லை.

பாழும் கடவுளுக்கும் கண்ணில்லை. ஒரு குழந்தையைக் கொடுத்திருந்தால் இப்படி இருப்பாளா?" என்றெல்லாம் பேசி தூபம்போடவாரம்பித்ததைக் கேட்டுக்கொண்டிருந்த நித்யா ஹரிஹரன் சொல்வதற்குமுன்பே தன்னுடைய வைர நகைகளைத் தானே கழட்டி இரும்புப் பெட்டியில் வைத்துவிட்டு சாதா சிகப்பு நகைகளைப் போட்டுக்கொண்டாள்.

ஏன் இப்படிச் செய்தாய் என்று ஹரிஹரனே, பிறண்டை பாட்டியோ கேட்கவே இல்லை. திருமால்புரம் வெறும் பட்டிக்காடு போன்ற ஊராகையால் அங்கு சினிமாவோ, கச்சேரியோ ஒன்றும் கிடையாது. மின்சார விளக்கே வீட்டிற்கு வரவில்லை. ஆகையால் நித்யாவுக்கு மேல்படி விஷயங்களால் ஒருவிதமான உபத்திரவமும் உண்டாக இடமில்லாது போயிற்று.

எனினும், அவ்வூரிலுள்ள உத்யோகஸ்தர்களின் மனைவிகள் ஒன்றுகூடி ஒரு தனிச் சங்கம் மட்டும் வைத்து நடத்திவருகிறார்கள். பெரிய உத்யோகஸ்தன் முதல் குமாஸ்தாவின் மனைவி வரையில் அதில் சேர்ந்திருப்பதால் அந்த இடத்தில் வித்யாசமோ, ஏழை பணக்காரர் என்கிற பேதமோ கிடையாது. பெரிய ஆபீஸரின் மனைவிதான் தலைவியாயிருப்பது வழக்கம்.

அதேபோல் ஹரிஹரன்தான் அந்த ஊருக்குப் பெரிய உத்யோகஸ்தன். அவருக்கு முன்பிருந்தவர் சென்று ஹரிஹரன் வந்த உடனே நித்யாதான் முறையே தலைவியாயிருக்கவேண்டியது. அவள் ஊருக்கு வந்து சேருவதற்குள் அவளைப் பேட்டிகாண, சங்கத்தின் அங்கத்தினர்கள் தம்முடைய சங்கத்தின் சட்டதிட்டங்களமைத்த காகிதங்களும் நித்யகல்யாணியம்மாளைத் தலைவியாயிருக்கும்படி ஏற்பாடு செய்துள்ள கடிதமும் ப்ரசன்னமாகியிருந்தன.

இதைக்கண்ட ஹரிஹரன் அளப்பரிய சந்தோஷத்தையடைந்து "நித்யா! உனக்கு மிகவும் பிடித்தமான வேலை யொன்று கிடைத்து விட்டது" என்று விவரம் கூறினன். நித்யா பதிலே பேசவில்லை. 'இதற்கு ஒப்புக்கொண்டு கடிதம் எழுது' என்றான்.

அப்போது நித்யாவின் கண்ணில் மளமளவென்று ஜலம் சொட்டியது. கம்மிய குரலில் "இதெல்லாம் எனக்கு வேண்டாம். நான் இதற்கு லாயக்கற்றவள். எழுதுவதையும், படிப்பதையும் என்றோ விட்டாயிற்று. எனக்கு ஒருவிதமான பந்தமும் வேண் டாம். நீங்களே முடியாது என்று எழுதிவிடுங்கள்" என்றாள்.

ஹரிஹரனுக்குக் கோபம் வந்துவிட்டது. உன்னைப்போன்ற பெண்கள் செய்யும் உயர்ந்த காரியத்தைக்கூடச் செய்வதற்கு உனக்கு இத்தனைத் திமிரா! பெரிய உத்யோகஸ்தன் மனைவிதான் தலைவியாக இருக்கவேண்டும் என்று ஒரு ரூல் வைத்திருக்கையில் அதை நீ உடைக்கவா பார்க்கிறாய்?" என்று அதட்டினன்.

அப்போது நித்யாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. விசனமே தேங்கிய முகத்திலும் ஒரு சிறிய புன்னகை தவழ்ந்தது. "நான் எந்த சங்கத்திற்கும் அருகதையற்றவள்; ஆகையால் என்னுடைய தலை மைப் பதவியை நான், எனக்குத் தலைமைப் பதவி வகிக்கும் உங்கள் தாயாருக்கு மாற்றிவிடுகிறேன். உத்யோகஸ்தரின் மனைவியைவிட உத்யோகஸ்தரின் தாயார் இன்னும் உயர்ந்தவர்களல்லவா!

அதோடு இந்த ஊரில் அம்மாவுக்குப் பொழுதுபோக்க சரி யான கதையா, புராணமா, சினேகமா, கோயிலா ஒன்றுமே இல்லை. அதனால் அவர்களை நியமித்துக் கடிதம் எழுதிவிடுங்கள்" என்றாள். இதைக்கேட்ட ஹரிஹரனுக்கு வியப்பாயுமிருந்தது; கோப மாயுமிருந்தது. ஆனால் பக்கத்து அறையிலிருந்து கேட்கும் பிரண்டை பாட்டிக்குச் சந்தோஷம் பொங்கியது. "அடேயப்பா! ஹரீ! என்ன விருந்தாலும் நித்யா நல்ல படிச்ச பொண்ணு. அறிவாளி. அவள் சொல்கிறபடியே எழுதியனுப்பு. எனக்கும் பொழுதுபோக்காக இருக்கும்" என்று சட்டம் போட்டாள்.

இதைக்கேட்ட நித்யா தனக்கு ஒரு பெரிய பாரம் நீங்கியதாக எண்ணினாள். அன்றே ஸ்திரீகள் சங்கத்திற்கு ஸ்ரீமதி பிரண்டை பாட்டி தலைவியானாள். 'குப்பம்மாள் என்கிற பேர் நன்றாயில்லையே! அதையே வைத்துக்கொண்டால் சிரிப்பார்களே!' என்கிற யோசனை குப்பம்மாளுக்கு உண்டாகியது.

நவநாகரிக முறைப்படி 'மிஸஸ்' என்று கொள்ளலாம் என்றால் குப்பம்மாளுடைய பர்த்தாவின் பெயர் ரிஷபத்வஜதீக்ஷிதர். 'மிஸஸ். ரிஷபத்வஜம்' என்று வைத்துக்கொள்ளலாமா!" என்று பார்த்தாள். அந்த பெயரும் காதுக்கு நன்றாயில்லை. வேறு என்ன செய்வ தென்று யோசித்தாள். ரிஷபம், என்றாலும் நந்தி என்றாலும் ஒன்று; த்வஜம் என்றாலும் கொடி என்றாலும் ஒன்றுதான். ஆதலால் 'நந்திக்

கோடியம்மாள்' என்கிறபெயர் தான் பொருத்தமானது என்று முடிவு கட்டியதால் சங்கத்தின் தலைவி ஸ்ரீமதி நந்திக்கோடியம்மாள், என்று ஸ்தாபிதமாகியது.

இந்த பதவி கிடைத்ததை ஸ்ரீமதி பிரண்டை பாட்டி பெரிய ஜட்ஜ் பதவி கிடைத்ததுபோலவே எண்ணினாள். அவளுடைய சந்தோஷம் அளவிட முடியாது. ஆனால் சங்கத்திலோ பாட்டியம்மாளின் தலைமைப்பதவியை எல்லோரும் வெறுத்தார்கள். "இந்த மொட்டச்சியை யார் கூப்பிட்டது" என்றுகூட முணுமுணுக்கவாரம்பித்தார்கள். தினம் சங்கத்திற்கு வருவதைக்கூட சிலர் நிறுத்தவாரம்பித்தார்கள். கிழவிக்கு ஜம்மென்று மோட்டார்கார் சவாரியும், புதிய வெண்பட்டுச் சேலையும் கிடைத்ததால் சங்கத்தின் நேரத்திற்கு சில மணி முன்பே வந்துவிடத் தொடங்கினாள். பாட்டியை தினம் பேரனே சங்கத்திற்கு அழைத்து வரவும், கொண்டு விடவும் தலைப்பட்டது பாட்டியின் சந்தோஷத்தைப் பின்னும் தூண்டியது.

சங்கத்தின் தலைவி உத்யோகப் பதவியிலிருந்தபடியே பெரிய இடத்துப் பெண்ணைப் பார்த்து யாதவனுக்குக் கல்யாணத்தைச் செய்துவிடவேண்டும் என்பது பாட்டியின் முதல் கோரிக்கை. ஆதலால் அவனையே காரை ஓட்டிவரச் செய்வதும், காரில் இருந்தபடியே மற்றவர்களிடம் பரிச்சயத்தை உண்டாக்குவதும், சிறிய பெண்களாயிருந்தால் என் பேரனைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா !" என்று பிரசாரம் செய்வதுமாயிருக்கும் தலைவியைக் கண்டு எல்லோரும் கட்டோடு வெறுத்தார்கள்.

வெகு சீக்கிரத்திலேயே சங்கத்தில், தலைவி ஸ்ரீமதி நந்திக்கொடியம்மாளும் சங்கத்து வேலைக்காரனும், யாதவனும் தவிர வேறு யாருமில்லை என்ற நிலைமையில் சங்கம் வந்துவிட்டது. ஹரிஹரன் தன் தாயார் வெகு மேன்மையான பதவியிலிருப்பதாக எண்ணி உள்ளம்பூரித்து அவள் தலைமைவகித்து நடத்தும் வைபவத்தைப்பார்ப்பதற்காக சங்கத்திற்குவந்தான். ஒரு சந்தடியும் இல்லாதது கண்டு மெல்ல காரை ஹாரன் செய்தான். வேலைக்காரன் ஓடிவந்து "ஸார் ! ஹாரனடிக்காதேங்கோ ! அம்மா எழுந்துவிடுவார்கள்" என்றதைக் கேட்டு ஹரிஹரன் வியப்புடன் இறங்கி உள்ளேவந்து பார்த்தான்.

குப்பம்மாள் ஜோராக ஒரு ஈஸிசேரில் சாய்ந்து ஆனந்தமாய்த் தூங்குகிறாள். வேலைக்காரன்மட்டும் நின்றிருக்கிறான். இரண்டு குழந்தைகள் ஓட்டம்விடும் ஆட்டம் ஆடிக்கொண்டிருந்ததையும் பார்த்து "அட க்ரகச்சாரமே! இதுதானா சங்கத்தின் வாழ்வு நிம்மதியாய் வேப்பமரத்து காற்றில் ஆனந்தமாகத் தூங்குவதற்காகவா அம்மா இங்கு வருகிறாள்" என்று நினைக்கச் சிரிப்பு வந்தது.

இதையறிந்த வேலைக்காரன், "ஐயாஏன் சிரிக்கிறீங்க? இன்னிக்கி இந்த இரண்டு குழந்தைகளாவது விளையாடுகிறார்களே ! சில தினங்களுக்கு அதுகூட இருக்காதே. இந்த கிழம் தலைமை வகிப்பது ஒரு

வருக்குமே பிடிக்கவில்லை. நூதன யோசனையா, விளையாட்டா ஒன்றுமே இல்லை. தலைவி ஏதேதோ பேசுவதும் நடத்துவதும் ஒரு வருக்கும் விருப்பமில்லை. மற்றவர்கள் எல்லாம் நின்றுவிட்டார்கள்" என்றான்.

இந்த அருமையான விஷயத்தைக் கேட்ட ஹரிஹரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "அம்மா எழுந்திரு. வீட்டிற்குப்போய் தூங்கலாம்" என்று எழுப்பினான். குப்பம்மாள் அலறி அடித்துக் கொண்டு "எண்டா! கார் வந்துவிட்டதா !" என்றாள்.

ஹரி:—கார்மட்டும் வரவில்லை. நானும்கூட வந்திருக்கிறேன். நீ தலைமைப் பதவி வகிப்பது வெகு அழகாகவிருக்கிறது. வீட்டிற்கு வா! போகலாம்—என்றான். இதைக்கேட்டகுப்பம்மாளுக்கு வெட்க மாகிவிட்டது. "யாதவ் எங்கேடா !" என்றாள்.

அந்த சங்கத்தில் அங்கத்தினராயிருக்கும் மிஸஸ் தாமஸி னுடைய பெண், மிஸ் தாமஸுடன் ஒரு மரத்தடியில் பேசிக்கொண் டிருப்பதை வேலைக்காரன் சுட்டிக்காட்டி "வழக்கம்போலத்தான் ஐயா அதோ அந்தம்மாளுடன் பேசிக்கிண்டிருக்கிறாங்க" என்றான்.

இந்த வார்த்தையைக்கேட்டுக் காட்சியைக் கண்ணால் பார்த் ததும் ஹரிஹரனின் கண்கள் சிவந்தன. தினம் தன் மகன் இப் படியா திரிகிறான் ? கிழவி, சங்கத்தின் தலைமைப் பதவி வகிப்பதன் பயன் இதுதானா !" என்று எண்ணி பல்லைக் கடித்தான். "அம்மா! இதென்ன வேலை ! அந்தப் பெண் யாரு? எத்தனை நாட்களாக இந்த வியாபாரம் நடக்கிறது!" என்று கண்கள் சிவக்கக் கேட்டான்.

உண்மையில் கிழவி பெரிய இடத்துப் பெண்ணைத் தேடி கல் யாணஞ்செய்விக்க ஆசைப்பட்டாளேயன்றி இம்மாதிரிஒருஅக்ரமம் நடப்பதை அறியவேமாட்டாள். தன்னை விட்டுவிட்டுப்போய்விடுவ தாயும், மீண்டும் வந்து அழைத்துப் போவதாயும் எண்ணியிருந்தாள்.

தோட்டத்திற்குள் சென்று பார்க்கும்போது பிறண்டை பாட் டிக்கே வயிறு எரிந்தது. "அடே யாதவ் ! என்று கத்தினாள். இந்த அவமானம் சகிக்காது ஹரிஹரன் வீட்டை நோக்கி நடந்தான். "நீ வீட்டிற்குப்போ பாட்டி ! நான் பிறகு வருகிறேன்" என்று யாதவ் கூறினான். இதைக் கேட்டதும் பாட்டிக்கு கோபம் தலைக்கேறியது. "அடேய் யாதவ் ! கட்டேலெ போறவனே ! எம் மானத்தே வாங் காதேடா ! வாடா வீட்டுக்கு" என்று கர்ஜனை செய்தாள்.

யாதவனும் அந்த பெண்ணும் சிரித்துக்கொண்டே "எம்பாட்டி! வீட்டுக்குப்போக பயமாயிருக்கிறதா ! துணைவேண்டுமா! பயமில்லை போ ! போ!' என்று கூறிவிட்டு ஓட்டமாக வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டு போய்விட்டார்கள். "ஐயோ, பாவம்! கிழவியின் பாடு எப்படி இருக்கும்? அவள் தலைமீது ஒரு பேரிடி இடித்ததுபோ லிருந்தது.

திருமால்புரத்தில் தண்ணீர் கஷ்டம் கூறமுடியாதாகையால் சமையல்காரன் ஒருமாதம்கூட நிற்கவில்லை; ஓடிவிட்டான். தனக்கு வீட்டு வேலை செய்வதைவிட வேறு வேலை என்ன இருக்கிற தென்று நித்யாவே சமையல் செய்வதும் ஒரு மைல் ஆழத்திலுள்ள கிணற்றில் தண்ணீர் தூக்குவதுமாக வேலை செய்யவாரம்பித்தாள்.

என்னவிருப்பினும் பெரிய உத்யோகஸ்தன் வீட்டில் பிசினறித் தனமாக வேலைக்காரன் நில்லாது தானே வேலை செய்கிருள் என்கிற சின்னச் சொல்லு கிளம்பியதால் ஹரிஹரன் அதைமட்டும் பொறுக் காது சமையல்காரனைத் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டான். ஒரு தினம் ஹரிஹரன் ஆபீஸுக்குப் போயிருக்கும் சமயம் குமாஸ்தா ஒரு சமையல்காரனையும் சமையல்காரியையும் அழைத்துவந்தான். பிறண்டை பாட்டி தூங்கிக்கொண்டிருந்தாள்.

குமாஸ்தா நித்யாவை அழைத்து "எஜமான்எப்படியாவது இன் றுக்குள் ஆளைத் தேடிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னர். வெளியூரிலிருந்து அழைத்துவந்திருக்கிறேன்" என்று கூறினன். தலையும் வேஷமுமாய்ப் பார்ப்பதற்கு வெகு பரிதாபமாயும், கேவலம் மெலிந்துபோய் நோயாளிபோன்றும் காணப்பட்ட நித்யா எழுந் திருக்கமுடியாமல் எழுந்து வந்தாள்.

நடைச் சவம்போல் உருவம் மாறி எலும்புக்கூடாக நிற்கும் இரண்டு ஆத்மாக்களைப் பார்த்ததும் "இதுகளா வேலை செய்யப் போகிறதுகள்" என்று தூரவிருக்கும்போதே நித்யா எண்ணிய படியே அருகில் வந்தாள். ஒட்டுப்போட்டு பதினயிரம் தையலுடன் உடம்பெல்லாம் தெரிந்தும் மூடியுமுள்ள கந்தல் புடவையும் குழி விழுந்த கண்களுமாக நிற்கும் சமையல்காரியைக் கண்டதும் நித்யா பரிதாபத்துடன் நோக்கினள்.

அடுத்த விநாடியே மின்ஸாரம் தாக்கியதுபோல் ஒரே யடியாக அலறியபடியே "ஐயோ! சமையல்காரியா!....அம்மா! அம்மா! தாமூ!"...என்று ஒரு கர்ஜனையே செய்தாள். அதே சமயம் அவர் களும் நித்யாவைப் பார்த்து..."நித்யா!...அக்கா!" என்று முறையே அலறினர்கள். ஞானத்தினல் சகிக்கமுடியாது துக்கமும் வயிற்றெ ரிச்சலும் கரைபுரண்டன. தன்னை மறந்து நித்யாவைச் சேர்த்தணைத் துக்கொண்டு கோவெனக் கதறிவிட்டாள்.

அடுத்த விநாடியே, "இதென்ன கூச்சல், அடேய்! சுப்புக் குட்டி"...என்று பிரண்டை பாட்டி குரல் கொடுத்தபடியே வருவ தைக் கண்ட தாமோதரன், "அம்மா! பிரம்மராக்ஷஸி வருகிருள். நம்மால் அக்காவுக்கு ஒரு கடுகத்தனை சுகமில்லையெனினும் துன்பமா வது இல்லாதிருந்தால் போதும்" என்று கூறினன்.

பிரண்டைப்பாட்டி இவர்களைப்பார்த்துவிட்டாள். "ஐயையோ! இதென்னடீ கோலம்! இந்த தரித்திரங்கள் எங்கு வந்ததடீ!" என்று

சொல்லிக்கொண்டே வந்தாள். ஆத்திரம் தலைக்கேறிய தாமோ தரன் பாட்டியின்மீது காறி உமிழ்ந்தவாறு "உன்னைவிட மூதேவியும் பெத்தம்மாவும் உலகத்தில் உண்டா! ராக்ஷஸி! உன்னைக் கண்டு எமன்கூட பயப்பட்டுக்கொண்டு ஓடுகிருனே உனக்குச் சாவு வராதா! என் நித்யா சுகப்படமாட்டாளா!" என்று தன்னை மறந்து தடதடவென்று கூறியவாறு தாயாரின் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டான்.

நித்யாவின் இதயம் வெடித்துவிடும்போலாகிய நிலைமையில் நினைவே அழிந்தது. மீண்டும் கண் திறந்து பார்க்கும்போது அவள் எதிரில் ஸ்ரீமதி பிரண்டை பாட்டிதான் நர்த்தனம் செய்துகொண் டிருந்தாள். நித்யாவால் தன் தயாரின் பரிதாபமும் சகோதரனின் கண்ருவியும் கண்டு சகிக்கவே முடியவில்லை. அவர்களுடைய நன் மையை உத்தேசித்துத் தான் செய்த மகத்தான த்யாகம் தன்னை இப்படி வதைத்துவிட்டதே என்று நினைக்கும்போது அவளை ஆயிரம் வாள்கொண்டறுப்பதுபோல் சித்திரவதை செய்தது.

"ஏண்டா! இந்த ரகஸியத் திருட்டு வேலை எத்தனை நாளாகச் செய்கிருய்?" என்று பிரண்டை பாட்டி ஆரம்பித்தபோது குமாஸ் தாவுக்கும் கோபம் வந்தது. "பாட்டி! வீணாக நீங்கள் அனியாய மாய்க் கத்தாதங்கோ! உங்கள் மகன் சமையல்காரன் வேண்டு மென்றதால் நான்தான் போய் அழைத்து வந்தேன். எஜமானியம் மாளின் பெற்ற தாயார் என்பது எனக்குத் தெரியுமானால் நான் அழைத்தே இருக்கமாட்டேன். இவர்கள் இத்தனை செல்வாக்குடன் இருக்கையில் பெற்ற தாயார் இத்தனை பரிதாபகரமாக இருப்பதைக் காண வயிறு எரிகிறது. ஐயோ பாவம்! அவர்கள் மனது துடிக்கும் போது நீங்களும் என் புண்ணில் கோலிடுகிறீர்கள்? பெற்ற தாயாரை இன்னிலையில் காண யார் மனதுதான் பொறுக்கும்? அதோடு தன் வீட்டிற்கே தன் தாயார் சமையல்வேலைக்கு வருவது என்ருல் என்ன அனியாயம்?"

என்று குமாஸ்தா இயற்கையாயுள்ள உணர்ச்சியுடன் கூறிய தைக் கேட்டதும் பிரண்டைப் பாட்டியின் ஆவேசம் அதிகரித்தது. "ஏண்டா! கட்டெடலே போறவனே! உன்னை நம்பி அந்த அசட்டுப் பிள்ளை எல்லாவற்றையும் ஒப்பித்ததற்கு நீ இம்மட்டுமா சொல்வாய் அதற்குமேலும் சொல்லுவாய். நீ அவள் கையிலகப்பட்ட பொம் மையா?" என்று கத்துவதைக் கேட்ட குமாஸ்தாவுக்கும் கோபம் வந்துவிட்டது.

தயாதாக்ஷிண்யம்பார்க்காமல் பாட்டியை அப்படியே அறைந்து விடவும் துணிந்தான். எஜமானருக்குப் பயந்து அடக்கிக்கொண்டு தாறுமாறுமாகத் திட்டினன். கிழவி வஞ்சத்துடன் உள்ளே போய்விட்டாள்.

நித்யாவுக்கு மனது கலங்கிப்போன வேகத்தில் இந்த சண்டை களில் நினைவே செல்லவில்லை. ராஜ வடிவமாயிருந்த தாமோதரனின் உருக்குலைந்திருக்கும் பரிபவமும், தாயாரின் பரிதாபமும் அவள் கண்களைவிட்டு அகலவே யில்லை. அவளால் எத்தனை சமாதானம் செய்தும் மனக்கொதிப்பு அதிகரித்ததேயன்றி குறையவில்லை.

ஏன் நாம் மட்டும் சத்தியம், நீதி, நியாயம் என்று கட்டுப் பட்டுக் கிடக்கவேண்டும்? இவர்கள் அநியாய வழியில் லஞ்சம் வாங்கி, வாங்கி சேர்த்த பணத்தை ஏன் வாரிக்கொடுத்து அந்தக் குடும்பத்தின் கஷ்டத்தைப் போக்கினால் என்ன? ஏன்? நான் என் சொந்த பெற்றோருக்குக் கொடுப்பதா பாவம்!" என்று ஒருவிதமான வெறியுடன்கூடிய வைராக்யம் உண்டாகியது.

உடனே எழுந்தாள். குமாஸ்தாவிடம் ஓடினாள். "சுப்பு! அந்த அதிர்ஷ்டஹீன ஆத்மாக்கள் எங்கே போனார்கள்? கொஞ்சம் கண்டு பிடித்து அழைத்து வருகிறாயா! என்னால் சகிக்கவே முடிய வில்லையே! சுப்பு! சற்று போய் வா; உனக்குப் புண்ணியமுண்டு" என்று கண்ணீர் பெருகக் கூறினாள். நித்யாவின் பரிதாபத்தைக் காண சுப்புவின் உள்ளம் உருகியது.

சுப்:—அம்மணீ! நான் எத்தனை சொல்லியும் அவர்கள் திரும்பிக் கூட பார்க்காது சென்றார்கள். அதோடு அவர்களைப் பிரண்டைப் பாட்டியின் முன்பு அவமானப்படுத்துவதற்குத்தான் வேண்டு மென்று இப்படி அழைத்துவந்திருக்கிறேனென்று என்மீது கோபத் துடன் போயிருக்கிறார்கள். நான் சத்தியமாகச் சொல்கிறேன். அவர்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. இவர்கள் பேரைச் சொன்னால் எங்கே வரமாட்டேன் என்பார்களோ! என்கிறதால் பெரிய உத்யோகஸ்தன் என்று மட்டும் சொல்லி வைத்தேன். இப் படியாகுமென்று நான் சொப்பனங்கூடக் காணவில்லையே!

நித்:—உம். இதெல்லாம் நான் பண்ணிய பாவம். வீணாக வருந்தி பயனில்லை. நீ சற்று ஓட்டமாக ஓடி அவர்களை அழைத்து வா...ஒரு காரியம் செய். அப்படி அவர்கள் வரமாட்டேனென்று சொன்னால் இதோடு இந்த இரண்டு புடவைகளையும் இந்த பணத் தையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு வா!" என்று ஒரு மூட்டை யைக் கொடுத்தாள்.

கார் கெட்டுவிட்டதால் ஹரிஹரன் வேறு வண்டி வைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். வாசலிலேயே சூர்ப்பனகியைப் போல் காத்துக்கொண்டிருந்த பிரண்டை பாட்டி ஹரிஹரனை அப் படியே மடக்கி, "அடேய்! அநியாயத்தைப் பாரடா! இந்த சுப்புக் குட்டியை நீ நம்பியபிறகு அவனும், அவளும்"...என்று உள்புறம் காட்டினாள்.

இவர்களுடைய போதாக்காலக் கொடுமைக்கு ஏற்றார்போல் அப்போதுதான் நித்யா மூட்டையைக் கொடுத்தாள். குமாஸ்தா

அதை வாங்கிக்கொண்டு இரண்டடி நடந்தான். தாயாரின் ப்ரத்யக்ஷ உபதேசத்திற்கு நிதர்சனமும் கிடைத்துவிட்டதால் அதற்குமேல் அந்த முட்டாளுக்கு வேறு என்ன வேண்டும்?

கண்மூடித்தனமாக ஓடிவந்தான். குமாஸ்தாவின் கையைப் பிடித்து இழுத்து அவன் கன்னம் வீங்கும்படியாக அடித்தவாறு "சோதாப் பயலே! இந்தமாதிரி காரியமா நீ செய்கிறாய்? இதற்குத் தானா குறைந்த சம்பளத்திற்கு வந்து கும்பிடு போடுகிறாய். என் வீட்டுப்படி இனிமேல் ஏறாதே. போய்விடு....உம்"....என்று மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

நித்யாவிடம் பாய்ந்து அவளையும் கண்ணுமண்ணு தெரியாது அடித்து "கள்ளி! இத்தகைய திருட்டுத்தொழில் நடத்துகிற வைராக்ய சிகாமணிதான் நீ பட்டினத்தார் பாடலைப் பாராயணம் செய்கிறாயா! வேஷக்காரி! த்ரோகி! உலகப் பற்றே இல்லாதவள்போல் நடிப்பதன் தத்துவம் இதுதானா! குமாஸ்தாவைக் கைக்குள் போட்டுக்கொண்டு சொத்துக்களைத் திருடியனுப்பவா பார்க்கிறாய்! உன் மூதேவி தாயாரை வரவழைத்து ரகஸியமாய் உறவாடவா ஜோடிக்கிறாய்! பத்திரம். எல்லை மீறினால் நீயும் உடனே வீட்டைவிட்டுப் போய்விடு. குமஸ்தாவின் மனைவியாகவே மாறிப் போய்விடு! கழுதை! உனக்கு இத்தனை மண்டைத் திமிரா வந்திருக்கிறது? என் தாயாரைக் கண்டு காரி உமிழ்ந்த அந்த ராஸ்கல் என் கண்ணில் படட்டும்; கிழித்துவிடுகிறேன்" என்று ப்ரமாதமாக இரைந்தான்.

ஈச்வர சாக்ஷியாய் பரிசுத்த பிம்பம்போல் வாழும் நித்யாவின் இதயம் இக் கொடிய பாணத்தை எப்படித்தான் தாங்கும்? நெருப்பின்மீதுபட்ட புழுவெனத் துடித்தாள். அவள் பொறுமை எல்லாம் பறந்தது. "ஐயோ! இந்த அநியாயத்தைப் பார்த்துச் சகித்துக் கொண்டு இருக்கும் கடவுளெல்லாம் கல்லா! செம்பா! காது கண்ணு இரண்டுமா அவிந்துவிட்டன. என்னுடைய தூய இதயத்தின் பரிசுத்தத்தை நீ கூடவா அறியவில்லை? க்ரகஸ்தாச்ரம வாழ்க்கையிலிருந்து விலகிக்கொள்ளும் வயதான கிழங்களுக்கு கல்யாணம் செய்துகொள்ளும் புத்தியைக் கொடுத்து இப்படி சந்தேகப் பேய் பிடிக்கச் செய்து ஆட்டி ஒரு நிரபராதியை வதைப்பதா உன் கல்யாண குணத்திற்கு அழகு!

நீயா தயாளன், நீயா பக்தவத்சலன், நீயா தயாநிதி, நீயா கருணா சாகரன்? இல்லை; இல்லை!...இது உனக்கு ஒரு சிறிதும் தகாது. கல்நெஞ்சன், அஞ்சா நெஞ்சன், பக்ஷபாதக் கள்வன், வஞ்சனைக்காரன், பக்தர்களைச் சித்திரவதை செய்யும் மோசக்காரன் என்னை இம்மாதிரி இம்சைப்படவா படைத்தாய். என் நிலைமை உனக்கும் தெரியவில்லையென்றால் வேறு யாரிடம் நான் கதறுவேன். என் பெற்றோருக்காக நான் என்னையே த்யாகம் செய்த பெருமையைக்கூட நினைக்காத நீ ஒருபோதும் தயாரக்ஷகனேயல்ல...

என்று மனம்போன போக்கில் பெரிதாக வாய்விட்டுக் கத்தினுள். கதறினுள். எரி குளங்களில் விழுந்து உயிரை விட்டுவிடுவதேயன்றி உயிர் வாழக்கூடாதென்ற வைராக்யத்திற்கு வந்தாள்.

நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்களாயின் எல்லாம் பேசலாம். நியாயத்திற்கு ஒரு மைலில் இருக்கும் அல்பர்களுக்கு இந்த புலம்பலைப்பற்றிக் கவலை ஏது? 'ராக்ஷஸி பத்திரகாளி' என்று நித்யாவைத் திட்டியவாறு போய்விட்டான்.

நித்யாவுக்கு இனி 5 நிமிஷம் கூட உயிர் வாழப் பிடிக்காததால் அவ்வூரில் ஓடும் ஆற்றில் விழுந்து இறந்துவிடுவதென்று தீர்மானித்துக்கொண்டாள். இரவு வெகு நேரமாகியது. எல்லோரும் தூங்குவதற்கும் ஊர் ஓசை அடங்குவதற்கும் காத்திருந்தாள். வைராக்யத்தில் தோய்ந்துள்ள இதயமாயினும் அந்த நடு நிசியைப் பார்க்கும் போது பயங்கரமும் மனத்தில் திக்கு; திக்கு என்று அடித்துக் கொள்ளும் கிலியும் உண்டாயின.

தான் அணிந்திருந்த சிகப்பு நகைகளையும் கழட்டி வைத்தாள். கந்தப் புடவையொன்று உடுத்திக்கொண்டு கடவுள் படத்தை வெறிபிடித்தவள்போல் முறைத்துப்பார்த்தாள். "சீச்சீ! தயாநிதியாம்...தயாநிதி...பேரைப் பாரு. நொள்ளைக் கண்ணனுக்குச் செந்தாமரைக் கண்ணன் என்று பெயர் வைப்பதுபோலத்தான் கல் நெஞ்சனுகிய உனக்கு தயாநிதி என்று பெயர் வைத்திருக்கிறுர்கள். உனக்கிந்த பெயர் தகாது. இந்த பெயரை இனி வைத்துக் கொண்டு அவமானப்படாதே. உன் பெயரை உடனே மாற்றிக் கொள்ளு" என்று பித்துபிடித்தவள்போல் கூறினுள். வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்.

இவளுடைய வெறி பிடித்த மனத்திற்கு அப்படம் இவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல் தோன்றியது "சிரிக்கிறுயா! என்னைப் படாதபாடும் படுத்தி வைத்துவிட்டுச் சிரிக்கிறுயா! என்னைப் பார்த்தா சிரிக்கிறுய்? என்னைப்போல் நீயும் அனுபவித்தால் சிரிக்க மாட்டாய். என்னைப்போல் நீயும் ஒரு சந்தேகக்காரக் கிழவனை மணந்திருந்தால் சிரிக்கமாட்டாய். என்னைப்போல் ஏழை வயிற்றில் பிறந்திருந்தால் சிரிக்கமாட்டாய். பாற்கடலில் பிறந்தாய். மனத்திற்கிசைந்த மணவாளனை மணந்தாய். எங்களைப்போன்றவர்களை ஆட்டி வைத்து நாடகம் பார்க்கிறுய். நீ சிரிக்காமல் என்ன செய்வாய். உனக்கு வெட்கமில்லை?" என்று நிந்தாஸ்துதியில் மனம் கலங்கிக் கூறினுள்.

ஸீதை, மான் பிடித்துத் தரும்படியாகக் கேட்கும் படம் இவளைப் பார்த்து கலகலவென்று சிரிப்பதுபோல் மீண்டும் தோன்றியது. நித்யாவுக்குக் கோபம் பின்னும் அதிகரித்தது. "ஆத்திரக் குடுக்கை என்கிற பெயர் உனக்குத்தான் பொருந்தும். தயாநிதி

என்பது எனக்குத் தகாதுதான். ஆத்திரக் குடுக்கையாய் நான் உன் போல் எதுவும் செய்துவிடவில்லை.

நான் ராஜாதிராஜன் வயிற்றில்தான் பிறந்தேன். ராஜாதிராஜனுக்குத்தான் மாலையிட்டேன். நானும்தான் படாதபாடு பட்டேன். ராவணன் சிறையில் அரக்கிகளின் மத்தியில் பரிதவித்தேனே! அப்போது நான் தற்கொலை செய்துகொள்வதாயின் செய்துகொள்ள மாட்டேனா! உன்போல் அவசரப்பட்டுச் செய்திருந்தால் என் பதிவிருதாதர்மம் என்னவாயிருக்கும். நான் இறந்த சோகம் என் கணவரை பாதிக்கும். அதோடு நான் தற்கொலை செய்துகொள்ள எனக்கென்ன சுதந்திரம் இருக்கிறது? நான் அவருடைய சரக்கல்லவா! அதனால்தான் அப்போது செய்துகொள்ளவில்லை.

என் பரிசுத்தத்தையறிந்தும் என் கணவர் என்னைப் பரீக்ஷித்து அக்னியில் மூழ்கி எழச் செய்தார். அப்போது நான் பின்வாங்கி கணவன்மீது கோபித்துக்கொண்டேனா! அவர் நெருப்பில் குதி என்றாலும் குதித்தேன். பிறகு ஊரில் எவனோ வண்ணான் ஏதோ சொல்லியதற்காக பூர்ண கர்ப்பிணியாயிருந்த என்னை சற்றும் ஈவிரக்கமற்று காட்டிற்கனுப்பினார். அப்போதுதான் உன்போல் தற்கொலைக்குத் துணிந்தேனா.

என் ப்ராணபதியின் ஜோதி என்கர்ப்பத்திலிருந்ததால் அதைக் காக்கும் பொருட்டும், நான் பரதந்திரி என்பதை எண்ணியும் பேசாதிருந்தேன். தற்கொலை என்பது கிள்ளுக்கீரையாகயிருக்கிறதா! அதிலும் பெண்கள் தற்கொலைக்குத் துணிவதற்கு அவர்களுக்கு அதிகாரம் ஏது? இதை நிரூபித்துக் காட்டுவதற்காகத் தானே நான் தற்கொலை செய்துகொள்ளாது பொறுமையே வகித்தேன். நீ இந்த அல்பத்திற்குத் தற்கொலைசெய்துகொண்டுவிட்டால் உனக்கென்ன மகிமை இருக்கிறது? "ஏதோ தெரியாமல் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். இளவயதின் சேஷ்டையால் தற்கொலை செய்துகொண்டாள். பொறுமையினால் இறந்தாள்" என்று உலகம் உன்னை நிந்திக்குமேயன்றி பூஷிக்காது. தெரியுமா! பொறுமையை நீங்கள் அறிவதற்காகத்தானே நாங்கள் உங்களைப்போன்று உலகத்தில் பிறந்து பல துன்பங்களை யனுபவித்துக் காட்டினோம். பைத்தியக்காரி! சாகிறாயாம்! செத்தால் என்னலாபம்? உனக்கும் கெட்ட பெயர். உன் சாவைக்கேட்ட சுதாவுக்கும் சாவுதான்! உனக்குத் தெரியாமலேயே உன்னைக்கண்டு உருகித் தவிக்கும் கோபுவுக்கும் சாவு. உன் பெற்றோர்களுக்கும் சாவு...சேச்சே...எத்தனை சாவு...வெட்கமாயிருக்கிறது. போ! பேசாமல் எங்களை நம்பி இரு. உனக்கு ஒரு குறைவுமில்லை" என்று அந்த படத்திலிருந்த ஸீதையின் உருவம் உறுத்திக் கூறினாள்.

இதைக்கேட்டு நித்யா அப்படியே அலறிப்போய், "என்ன! நான் அவசரக்குடுக்கையா!" என்று வாய்விட்டுக் கூறியபடியே கண்

விழித்தாள். மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. எங்கும் இருள் சூழ்ந்து அந்தகாரமாயிருக்கிறது. "ஹா...என்ன!.... என்ன!....இது என்ன தடுமாற்றம்...இவ்வளவு நேரம் நான் கண்டது முற்றிலும் சொப்பனமா!...நானா தூங்கினேன்....எனக்கா சொப்பனம்?என்று சிலவினாடிகள் தன்னிலைமைதடுமாறித்தவித்தாள்.

விளக்கைப் பொருத்திப் பார்த்தால் கடியாரத்தில் மணி இரண்டடித்திருந்தது. ஊர்முற்றும் நிச்சப்தம் குடிகொண்டிருக்கக்கண்டு நடுங்கினாள். தான் இதுவரையில் பார்த்த படம் தன்னறையில் இல்லாதது தெரிந்ததும் மீண்டும் அறை பூராவும் பார்த்தாள். எங்கும் ஒருவித மாறுதலும் இன்றி பழயமாதிரியே இருந்தது கண்டு பின்னும் திடுக்கிட்டாள்.

"ஐயையோ! கடவுளை வாய்க்கு வந்தபடித் திட்டியும் அவன் சரணாகதரக்ஷகன், பக்த பரிபாலகன், பக்தவத்ஸலன், தயாநிதி என்பதை நன்கு காட்டிவிட்டானே! நான் செய்த பாதகங்கள் போதாதென்று இன்னும் மூட்டை கட்டிக்கொண்டேனே! ஜகதீசா! என்னை க்ஷமிப்பாயா! என் பாபத்தை மன்னித்து எனக்குச் சாந்தபுத்தியை அளிப்பாயா! அடாடா! மலையத்தனை பாவத்தில் கடுகளவு புண்ணியம் செய்ததுபோல் சொப்பனத்திலாவது அந்த ஜகன்மாதா எனக்கு ப்ரத்யக்ஷகாக்ஷியளித்ததோடுமட்டுமின்றி எனக்கு புத்திமதிகளும் கூறியதற்கு நான் என்ன பாக்யம் செய்தேனோ!

லோகமாதா! ஜகத்ரக்ஷகி! என் அறியாமையை மாற்றி எனக்குப் பொறுமையைக் கொடு. என்னை மன்னித்துவிடு"என்று வேண்டிக்கொண்டாள். ஆனால் கனவில் கேட்ட வார்த்தைகளில் ஒன்று மட்டும் அவள் மனத்தில் ஆணி அறைந்ததுபோல் பொத்தியது. அதாவது,—எனக்காக கோபு வாடி வருந்துகிறானமே! இதென்ன வேடிக்கை! எனக்கொன்றும் புரியவே இல்லையே! இன்னுமா அந்த மனிதன் கல்யாணம் செய்துகொள்ளாதிருக்கிறான்? ஐயோ! இதென்ன புதிய கவலை? ஒன்றுபோனால் ஒன்று இப்படியா வரவேண்டும்?" என்று தனக்குள் குழம்பித் தவித்தாள்.

இதற்குமுன்பு இருந்த வைராக்யம் எப்படியோ மாயமாய் மறைந்தது. தான் தற்கொலை செய்துகொள்வது மகா பிசகு என்கிற முடிவுக்கு வந்தாள். அதற்குமேல் மனது வெவ்வேறு விதமாகத் தவித்தது. நித்திரையும் வரவில்லை. "எத்தனை சோதனைகள் வந்தாலும் சரி. இனி தற்கொலை செய்துகொள்வதில்லை"என்று ஒரு வைராக்யம் கொண்டாள். பித்து பிடித்தவள்போல் ஜன்னலில் வந்து நின்று வானத்தை நோக்கினாள். பெருமூச்சு விடுகிறாள். சுதாவை எண்ணி ஏங்கினாள். தன் தாயாரின் பிம்பத்தை எண்ணி உருகினாள். என்ன தவித்தாலும் அவளை ஏனென்று கேட்பார்யார்? தன்னந்தனியே இதயத்தவிப்புடன் பதுமைபோல் நின்றிருந்தாள். பெருமூச்சுதான் தூரத்தியடித்தது.

OFFICE OF T.E ... 14 OCT 1941 MADRAS

கோபுவின் வார்த்தையைக் கேட்டு உள்ளம் உருகிய சுதா அன்னாகாரமே கொள்ளாது தவித்தாள். மறுபடியும் கோபுவையே கண்டால்அவன்மூலம் தன் தாயாருக்காவது கடிதம் எழுதித் தகவலறியலாமே! அதுவும் முடியவில்லையே! என்ன செய்வது என்று வருந்தினாள். "எது எப்படியாவது இருக்கட்டும். தலைவியிடம் தொந்திரவு செய்து ஊருக்குக் கிளம்பிவிடுவதே சரி" என்று துணிந்தாள்.

மறுநாள் தலைவியிடம் தைரியமாகச் சென்று தன்னை ஊருக்கு அனுப்பும்படிக் கேட்டதற்கு அவள் உன் பிதாவிடமிருந்து கடிதம் வந்தாலன்றி ஊருக்கு அனுப்பமுடியாதென்று கண்டிப்பாய்க் கூறினாள். இதுகேட்ட சுதா மனம்முறிந்து மீண்டும் தன்னறைக்கு வந்து சேர்ந்தாள். ஜெயிலுக்கும் இதற்கும் என்ன வித்யாஸம் இருக்கிறது இரண்டும் ஒன்றுதான் என்கிற எண்ணம் மனத்தில் ஊர்ஜிதமாகி விட்டதால் சவம்போல் படுத்துக் கிடந்தாள். மறுபடியும் தகப்பனாரின் மனம் கரையும்வண்ணம் ஒரு கடிதம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்து அன்றே அனுப்பினாள்.

ஹரிஹரன் அன்று மகன் ஒரு பெண்ணுடன் குலாவுவதைக் கண்டு வெறுப்புற்றதுமுதல் அவனுக்கு விரைவில் கல்யாணத்தைச் செய்துவிட தீவிரமான ஏற்பாட்டைச் செய்துவந்தான். எந்த பெண்ணைப்பற்றிக் கேட்டாலும் அவன் சம்மதிக்காததோடு, "நான் அந்த கிருஸ்துவப் பெண்ணைத்தான் மணப்பேன். இஷ்டமானால் என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் என்னை விட்டுவிடுங்கள். அவள்தான் எனக்குப் பிடித்திருக்கிறாள்" என்று பகிரங்கமாகப் பிதாவிடத்திலேயே கூறினான்.

ஹரிஹரனின் ஆத்திரம் கரைபுரண்டதால் மகனிடம் சண்டை போட்டு இம்மாதிரி தத்தாரியாய்த் திரிவதனால் இனி இங்கு அடி எடுத்து வைக்கவேண்டாமென்று கண்டவாறு திட்டினான். அவனோ இதற்கு லக்ஷியம் செய்கிறவன். நாய் குலைப்பதாக எண்ணினான்.

அதே மனக்கொதிப்புடன் உட்கார்ந்திருக்கையில் சுதாவின் ரிஜிஸ்டர் கடிதம் வந்தது. அக்கடிதம் மனத்தை உருக்குவதற்குப் பதிலாக மனத்தை முறியடித்தது. அதாவது "உங்களை நம்பி வாழ்க்கைப்பட்டதற்குப் பலனா தாமோதரனை வீடு, வீடாக மாதவரம் பிச்சை எடுக்கவைத்தீர்கள்? இது அழகா! இது தர்மமா!" என்று எழுதியிருந்ததே காரணமாகும். அதனால்அதற்குப்பதிலே போடாது நிறுத்திவிட்டான்.

"மாதவரமாவது எடுக்கட்டும். மண்ணாவது வெட்டட்டும். இந்த அல்பச் சிறுக்கிக்கு வந்த அக்கரை என்ன?" என்று வெறுப்புற்றான்.

"பெண்ணின் புத்தி இந்த கதி; பிச்சைக்காரனை இச்சிக்கிறது. மகனின் புத்தியோ, ஜாதிவிட்டு ஜாதி தாவுகிறது. இப்படியும் ஒரு கர்மம் இருக்குமா! இரண்டு சனியன்களுக்கும் கல்யாணத்தை முடித்துவிட்டால் சற்று கவலை குறையுமா!" என்று எண்ணினான்.

பிரண்டை பாட்டி ததாஸ்து பாடினாள். ஏற்கெனவே பார்த்திருந்த வரனுக்கு கல்யாண விஷயமாகக் கடிதம் எழுதினான். அவர்களும் பெண்ணைப் பார்த்திருப்பதாலும் பெரிய இடத்துச் சம்மந்தம் என்பதாலும் உடனே இசைந்து எழுதிவிட்டார்கள். இச்செய்தியை சுதாவுக்கு எழுதவே இல்லை. கல்யாணத்திற்குச் சரியாக அவளை அழைத்துவந்து உடனே கல்யாணத்தைச் செய்துவிடவே எண்ணி முடிவு கட்டி முகூர்த்தமும்வைக்க ஏற்பாடு செய்தார்கள். அன்றைய சம்பவத்திற்குப் பிறகு நித்யா மீண்டும் பழயபடியே வைராக்ய பிம்பமாக விளங்கினாள்.

கல்யாண ஏற்பாடு நடப்பதும் அவளுக்குத் தெரியாது. அவளாகவும் ஒன்றும் விசாரிக்கவில்லை. "நல்ல இடத்தில் சுதா வாழ்க்கைப்பட்டுச் சந்தோஷமாயிருந்தால் போதும்" என்று அவளுடைய இதயம் நினைத்து இன்புற்றது.

இச் சந்தர்ப்பத்தில் ஒருதினம் தாமோதரன் கண்ணீர் வழிய மாலை நாலு மணி சுமாருக்கு நித்யாவின் வீட்டுத் தோட்டத்துப்புறம் வந்து கூப்பிட்டான். நித்யாவுக்குத்தூக்கிவாரிப்போட்டது. "இவன் ஏன் வரவேண்டும்?" என்றுகூடத்தோன்றியது.புறக்கடைப் பக்கம் வந்து அவனைப் பார்த்ததும் கண்ணீர் மளமளவென்று சொட்டி வாயடைத்தது. பேச்சே கிளம்பாது தவித்தாள்.

"தாமு! இன்னும் இங்கு வர உன் மனம் விரும்பியதா! உனக்கு நான் சொல்லவேண்டுமா!" என்று நாக்குளறக் கூறினாள்.

தாமோதரன் கண்ணீர் பெருகியவாறு "அக்கா! நான் வரவே வேண்டாமென்றுதான் பார்த்தேன். அம்மாவுக்கு முன்பு இங்கிருந்து போனதுமுதல் உடம்பே சரியில்லாது தவிக்கிறாள். அதோடு இப்போது ஒருவாரமாக உடம்பு அதிகமாகிவிட்டது. சதா உன்னைப் பார்க்கவேண்டுமென்று வாய்ப்பிதற்றுகிறாள். எத்தனை சொல்லியும் கேட்கவில்லை. "நித்யா! நித்யா!" என்று கதறுகிறாள். ஒரு நாட்டு வைத்தியனும் பார்த்து "இனி தாளாது. யார் யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ தெரிவித்துவிடுங்கள்" என்றான். 'அக்கா! என்ன செய்வது?' என்று கண்ணீர் விட்டுக் கதறினான்.

இதைக்கேட்ட நித்யாவுக்குப் புதியதாக ஒன்றுமே துயரம் உண்டாகவில்லை. உலகத்திலேயே ஒருவருக்கும் தோன்றாவிதமாகப் புதிய எண்ணமும், த்ருப்தியும் உண்டாயின. அவள் தன்னால் பட்ட கஷ்டம் தீர்ந்து இறப்பதுபற்றிச் சந்தோஷமே உண்டாகியது.

தகப்பனுரை எப்படியாவது காப்பாற்றிவிடுவான். தாயார் நிம்மதி யடைவதுபற்றி பரம சந்தோஷப்படுவதை அவள் முகமே எடுத்துக் காட்டியது. கண்ணீர் சொட்டுவது மட்டும் நிற்கவே இல்லை.தாமோ தரனின் பரிதாபத்திற்கு ஏதாவது உதவியாவது செய்ய அவளுக்கு ச்வதந்திரம் உண்டா! அதுவுமில்லை. ஆதலால், "தாமூ! அம்மாவின் மறைவுக்கு நான் சந்தோஷப்படுகிறேன். இந்தப் பாவியால் அவள் அனுபவித்த துன்பம் போதும். நான் இந்த ஜெயிலிலிருந்து பேரவே முடியாது. என்னைப்போல் கல்நெஞ்சம் உலகத்தில் யாருக்கும் இருக்காது.தாமோதரா! பெற்ற அன்னையைப் பார்க்கக்கூடசுதந்திர மில்லாத மகாபாவி நான்.நான் யாரோ, அவள் யாரோ! அந்த உத்தமி யின் வயிற்றில் நான் எங்கிருந்து பிறந்தேனே! என்னுடைய எதிர் பார்ப்பும், ஆவலும், த்யாகமும் விழலுக்கிரைத்த நீர்போலாகியது தான் எனக்குப் பரம வேதனையாயிருக்கிறது. நீ போய் அம்மாவை கவனித்துக் கொள்ளு. என்னைப்பற்றி நினைக்கவேண்டாமென்று சொல்லு. நீ இங்கு வந்ததே ஒருவருக்கும் தெரியவேண்டாம். என்னுல் நீங்கள் அடைந்த பலன் போதும். நான் வந்து பார்ப்பதால் அம்மாவுக்கு சாகுங் காலத்திலும் வேதனையே யன்றி வேறில்லை. நீ போய்விடு. உன்னை யாரேனும் பார்த்துவிடப் போகிறுர்கள்" என்று தன் மனவேதனையை அடக்கிக்கொண்டு கூறினுள்.

இதைக்கேட்ட தாமோதரன் தாங்கமாட்டாத துக்கத்துடன் "அக்கா! இங்கு வருவதால் லாபம் ஒன்றுமில்லை; இப்படித்தான் நீ செய்வாய் என்று நான் நினைத்ததுதான் சரியாயிற்று. எது எப் படி இருந்தாலும் இருக்கட்டும். அத்திம்பேரின் காலில் விழுந்து நானே கெஞ்சுகிறேன். ஒருமுறை வந்து பார்த்துவிட்டுப் போ! அம்மாவின் மனது சாகும்போதாவது நிம்மதியாக இருக்கட்டும். நீ தட்டாதே. அம்மாவின் புலம்பலை நீ பார்த்தால் தெரியும். உன் நினைவாகவே கதறுகிறுள். நான் உள்ளே வரட்டுமா!" என்றுன்.

நித்:—தாமூ! அம்மாவின் கதறல் எனக்குத் தெரியாதா! நான் இவர்களை மகா உயர்ந்த மனிதர்கள் என்றும்,சொல்லியதைச்செய்து முடிக்கும் உத்தமர்கள் என்றும் எண்ணித்தான் நான் என்வாக்கைத் தட்டாது பரிபாலனம் செய்தேன். இப்படி வந்து முடியும் என்று எனக்குத் தெரியுமா! ஏதோ ஒரு ஆசை பார்க்கிறேன். அவர் ஊரி லில்லை; நாளைக் காலையில் வருகிறுர். வந்தபிறகு கேட்டுவிடுகிறேன்— என்றுள்.

தாமோதரனும் அதோடு போய்விட்டான். நித்யாவின் மனது கொதிக்கிறது. அழுது அழுது கண்கள் கலங்கி வீங்கிப் போய் விட்டன. என்றுமே நித்யாவுக்கு உபவாஸம். இன்று கேட்க வேண்டுமா! தண்ணீர் குடிக்கவும் பிடிக்கவில்லை. "தம்பி எங்கு சாப் பிடுகிறுனே! என்ன அலைகிறுனே! தாயாருக்கு எப்படியிருக்கிறதோ

உயிர் இருக்கிறதோ போய் விட்டதோ!" என்கிற கவலை பாதிக்க அப்படியே சோகப் பதுமைபோல் படுத்திருந்தாள்.

தாயாரின் பரிதாப நிலைமையைக் கண்டு ஒரு புடவையைக் கொடுத்தனுப்பியதற்கே அடாதவார்த்தைகளையும் படாப்பழியையும் கூறிய மனிதரிடமா நான் ஊருக்குப் போகிறேன் என்று கேட்பது? சேச்சே! தாமோதரனிடம் அவருக்குள்ள வஞ்சத்தில் அவனை அப்படியே கொன்றாலும் கொன்றுவிடுவார். எதற்கும் அஞ்சாத மனிதனிடம் அனியாயமாக அடிபட்டுச் சாவதைவிட அவனாவது எங்கேனும் பிழைத்துக்கொள்ளட்டும். என்னைப் பார்த்து ஆக வேண்டியது என்ன? அவனாவது ஆபத்தின்றி பிழைக்கட்டும்" என்று தனக்குள் முடிவு கட்டிக்கொண்டு நித்திரை பிடிக்காமல் புரண்டாள்.

உத்திரவுச் சீட்டின்றி உலகமெல்லாம் யாத்திரை செய்யும் மனத்திற்குக் கட்டுப்பாடும் திட்டமும் எங்கேனும் நிலை நிற்குமா! ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் சென்று அலைந்தது. தாயாரின் சாவைப்பற்றி எண்ணாததும் எண்ணி மனது புண்ணாகித்தவித்தாள். கண்களை எத்தனை பிரயாசைப்பட்டு மூடியும் நித்திரை என்பது அவள் கிட்ட அணுகவே இல்லை. தன்னுடைய கஷ்டத்திற்கு விமோசனம் எப்போதுஏற்படுமென்று யோசித்தபடியேயிருந்தாள்.

அடுத்தவீட்டில் சின்ன இளந் தம்பதிகள் ஆனந்தமாகத் தம் குழந்தையுடன் விளையாடிக்கொஞ்சிக் குலாவிக் களித்து மகிழ்ந்த படியே அதற்குப் பிடித்தமான பிளேட்டுக்கள் சிலவற்றை வைத்து அதற்குச் சரியாக குழந்தையை ஆடச்செய்து இருவரும் பேரானந்த மடைந்து பேசும் இன்பக்குரல் நித்யாவின் காதில் விழும்போது இத்தனை சோகமும் கலக்கமும் இருப்பினும் அவள் இதயத்தில் ஒரு விதமான ஆனந்தமும் சாந்தியும் நிலவின.

அக் குழந்தையும் அதன் பெற்றோர்களும் தீர்க்காயுஸாயிருக்க வேண்டும் என்று இதய பூர்வமாய் வாழ்த்தினாள். தன்னை மறந்து எழுந்து ஜன்னலினருகில் சென்று நின்று அக் காட்சியைக் கண்ணாரக்கண்டாள். உள்ளம்பூரித்தாள். ரதியும் மதனும்போன்ற எழிலும் அதற்குச் சிகரம் வைத்ததுபோன்ற பிரியமும் கொண்டுள்ள தம்பதிகளின் காக்ஷி அவள் இதயத்தில் ஆனந்தத்தைக் கிளப்பி ஒரு நூதன உணர்ச்சியைக்கொடுத்தது. "உம்...உலகத்தின் லீலைகள் பலவிதம்" என்றுதானே எண்ணியவாறு கட்டிலில் வந்து படுத்தாள். கட்டிலடங்காது தவிக்கும் மனத்துடன் புரண்டுபுரண்டு படுத்திருந்தாள். அப்போது கிராமபோனில்,

மனமே! வீண்சபலம் கொள்ளாதே! உன்னைக்
கட்டிப் பிடித்து வதைத்துப்புரட்டிடும்
இனமும்சுற்றமும் இன்பமும்மற்றும்
தனமும் தானியக்களமும் சதமென்று

(ம)

என்கிற பதங்கள் காதில் பட்டதும் அவள் தேகம் சிலிர்த்தது. வெயர்வை வெள்ளம்போல் பொங்கி வழிந்தது. "எனக்குச்சரியான பாட்டை வைப்பதற்குப் பக்கத்துவீட்டுக்காரர்களுக்குக்கூட என் கேவலம் தெரிந்திருக்கிறதா!" என்று வியப்படைந்த சமயம்,

அடுத்துவருவதை நீ அறிவையோ மனமே!
தடுத்திடும் சக்தியை பெறுவையோ மனமே!...

என்ற பாடலை கிராமபோன் அலறியபோது அவளுக்கு ஒருவிதமான நடுக்கலும் பயமும் உண்டாகி திடுக்கிடச்செய்தது. அப்போது மணியும் 11 அடித்ததால் அதோடு கிராமபோன் நின்றது. பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் சந்தடிமுற்றும் அடங்கியது. "அம்போ!" என்ற ஒருவிதமான இறைச்சலும் இருளின் பயங்காரமும்தோன்றின.

கட்டிலில் படுத்திருந்த நித்யா தூக்கம் பிடிக்காது ஜன்னல்வழியால் எழுந்து நின்று வானவெளியை நோக்கினாள். பக்கத்துவீட்டில் மெல்லியதாக சிறிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அப்போதும் சிரிக்கும் சப்தமும் குசமசவென்று பேசும் குரலும் கேட்டு நித்யாவின் உள்ளம் மகிழ்ந்தது. "இன்னும் அவர்களும் தூங்கவில்லையா" என்று தனக்குள் எண்ணினாள்.

மறுபடியும் கட்டிலில் வந்து படுத்தாள். நாய் குலைக்கும் ஓசை அப்போதைக்கப்போது கேட்டது. ஒரு நிமிடம் நகர்வது ஒரு யுகம் போவதுபோல் தோன்றியது. மெல்ல மெல்ல நேரம் நகர்ந்து மணி ஒன்றடித்தது. கட்டிலில் எண்ணமிட்டுப் படுத்தபடியே ஒருவாறு கண்ணயர்ந்தாள். மறுபடியும் திடுக்கிட்டு விழித்தாள். மீண்டும் சற்று நேரம் சென்று கண்மூடினாள்.

அச்சமயம் அவ்வறையில் ஏதோ சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தாள். மேஜைமீது எரிந்துகொண்டிருந்த விளக்கு அணைந்திருந்தது. ஆனால் இரும்புப் பெட்டியினருகில் சிறிய சப்தம் கேட்டதுடன் வெண்மையான உடை தெரிந்தது.

அவள் எப்போதும் தலைமாட்டில் தயாராக வைத்துக்கொண்டிருக்கும் டார்ச்சு விளக்கைச் சடக்கென்று ஏற்றி இரும்புப் பெட்டிக்கு நேரே பிடித்துப் பார்த்தாள். "கள்ளன்! கள்ளன்!" என்று வாய்விட்டுக் கூறியபடியே மெல்ல எழுந்து உட்கார்ந்து உற்று நோக்கினாள்.

ஆஹா! என்ன வியப்பு! ஒருகையில் நகைகளும், ஒருகையில் பிச்சுவாக் கத்தியுமாகத் திருடன் காட்சியளிப்பதைக்கண்டு குடல் நடுங்கியது. மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது

திருடன் திருடன் என்று முதலில் சற்று சத்தமிட்
டுக்கூவியவாறு இறங்கப்போகும் சமயம் திருடன்
"உஸ், உஸ்." கத்தினால் கத்திக்கு இரையாவாய்

பத்திரம்'' என்று இவள் பக்கம் முகத்தைத் திருப்பிப் பார்த்த படியே கூறினன்.

அவ்வளவுதான் நித்யாவின் தேகம் நடுங்கியதோடு "ஹா!.... யாதவ்!...யாதவ்!...நீயா இந்த காரியம் செய்கிருய்!....யாதவ்!" என்று அலறிக் கூறியபடியே கட்டிலிலிருந்து தடாரென்று குதித்தாள். யாதவின் கையிலுள்ள கத்திக்குக்கூட பயப்படாமல் அவனருகில் ஓடிவந்தாள். "யாதவ் இதென்ன அனியாயம்! உன் வீட்டிலேயே நீயே திருடுவதா!...ஐயையோ! யாதவ்...யாதவ்!"...என்று கத்தியபடியே அவனருகில் சென்று கையைப் பிடிக்கமுயன்ருள்.

தான் மனிதப் பிறவி என்பதைக்கூட மறந்து யாதவ் கையிலிருக்கும் கத்தியால் நித்யாவின் கையில்குத்திவிட்டு நகைகளைமட்டும் வாரிச் சுருட்டிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தான். இளந்தளிர்போன்ற கையில் கத்தியால் குத்தியதும் ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது.வலி தாங்காமல் "ஹா! யாதவ்! யாதவ்!ஓடாதே... ஓடாதே...உன்னுடைய சொத்தை நீயே தாராளமாகக் கேட்டு வாங்கிக்கொள்ளாமல் ஏன் இப்படி அனியாயமாய்த் திருடுகிருய்? என்று கத்தினுள்.

அவ்வறையில் அவளைத் தவிர வேறு யாருமில்லை. அவன் காற்றினும் கடிய வேகமாய் மறைந்ததை அறிந்தாள். மெல்லிய தேகத்தில் கத்திக் குத்து தாங்காது மயக்கமாகக் கீழே விழுந்தாள். அவள் கையில் பெருகும் ரத்தத்தில் அவள்சேலை தோய்ந்துமிதந்தது.

35

"வாப்பா! வா! ரங்கநாதா! க்ஷேமமா! பாலிய சினேகிதத்தின் வாசனை விடாது வந்ததுபற்றி மிக சந்தோஷம். ஏது திடீரென்று வந்தாய்? என்று ராமநாதன் கேட்டார்.

ரங்:—காரியமாகத்தான் வந்தேன். என் பெண் விமலாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யலாமென்றிருக்கிறேன்.

ராமு:—ஓகோ! நான்கூட கேள்விப்பட்டேன். அந்த லஞ்சம் வாங்கும் பேர்வழி ஹரிஹரனின் மகனுக்குக் கொடுக்கப் போகிருயாமே....சேச்சே!....அது உனக்குத் தக்க சம்மந்தமில்லையப்பா! நானே உனக்கு இதுபற்றி கடிதம் எழுத நினைத்தேன்; நீயே வந்தாய். அந்த பையன் வெறும் தத்தாரி. குணங்கெட்டவனும். சுகமில்லை. நீயோ தாயில்லாக் குழந்தையை அருமையாய் வளர்த்தாய் போயும் போயும் இதை அவனிடமா கொடுக்கப்போகிருய்?

ரங்:—நான் யாரிடம் இதைப்பற்றி ப்ரஸ்தாபித்தாலும் இப்படியே பதில் வருகிறது. அதோடு விமலா இப்போது தனக்கு விவாகமே வேண்டாமென்று பிடிவாதம் செய்கிருள். என்னையோ

ஊரைவிட்டு மாற்றிவிட்டார்கள். அவளுக்கு அக்கரையாகக் கவனிக்கும் திக்கு வீட்டிலில்லை. அவள் படிப்பதற்கு ஆசைப்படுகிருள். ஆதலால் அவளை ஒரு நல்ல ஹாஸ்டலில் சேர்த்துவிடலாமென்று நினைக்கிறேன். கல்யாணத்தைப்பற்றி பிறகு பார்க்கலாம். எந்த ஹாஸ்டலில் சேர்க்கலாம் சொல்லு.

ராம:—இப்போது சொன்னயே, இது நல்ல யோசனை. என் பெண் கமலாவைக்கூட நான் ஹாஸ்டலில்தான் சேர்த்திருக்கிறேன். அது நல்ல ஹாஸ்டல், ஹரிஹரனின் பெண் சுதாகூட அங்குதானிருக்கிருளாம். இதோ விலாசம் கொடுக்கிறேன். அந்த ஹாஸ்டல் தலைவி வெகு நல்லவளாம். அவளுடைய பாதுகாப்பில் பெண்கள் நன்ருகப் படித்து விருத்தியடைகிருர்களாம். லீவுக்குக்கூட கமலா வரமாட்டேன் என்கிருளே!

ரங்:—நல்ல வேளை. தெரிந்தவர்கள்கூட இருப்பதால் விமலா சந்தோஷப்படுவாள். நீயே இன்னும் கமலாவுக்குக் கல்யாணம் செய்யவில்லையே, விமலாவுக்கு என்ன அவசரம்?

ராம:—போடா பைத்தியம்! கல்யாணமாவது கார்த்தியாவது என் மூத்த பெண்ணுக்குக் கல்யாணத்தைச் செய்ததோடு என் மனது முறிந்துவிட்டது. இவளுக்குக் கல்யாணமே பண்ணப்போவதில்லை. பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். நன்ருகப் படிக்கட்டும். இதோ இந்த விலாசத்திற்கு நீயே நேரில் போய் பார்த்து தலைவியிடம் தீர்மானம் செய்துகொண்டு வந்துவிடு. பிறகு குழந்தையைக் கொண்டு விடலாம். சரி. ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வா—என்ருர்.

இருவரும் சாப்பிட்ட பிறகு ரங்கநாதன் அன்றைய வண்டியிலேயே கிளம்பிப் போய்விட்டார். தாயில்லாத பெண்ணுகையால் வெகு செல்வமாக வளர்த்துவருவதால் அவளை நல்ல நிலைமையில் நல்ல ஆதரவில் விடுவதற்கு இஷ்டப்பட்டார். இரவு 10 மணி சுமாருக்கு அந்த ஊருக்கு வண்டி வந்து சேர்ந்தது. வாடகை மோட்டார் அமர்த்திக்கொண்டு நேரே ஹாஸ்டலுக்கு வந்தார்.

8-மணி வரையில்தான் ஹாஸ்டல் திறந்திருக்கும். பிறகு மறுதினம் காலையில்தான் திறப்பார்கள். ஹாஸ்டலுக்கு எதிரில் ஓர் பெரிய ஓட்டல் இருக்கிறது. அதில்தான் இரவு வருகிறவர்கள் தங்குவது வழக்கம். அதேபோல் டாக்ஸிக்காரன் இவரை ஓட்டலுக்கு அழைத்துச் சென்ருன்.

ஓட்டல் மானேஜர் இவரை வரவேற்று உபசரித்து மாடியில் தனியறை யொன்று சவுகரியமாய்க் கொடுத்தான். ரங்கநாதன் அறையில் உலாவியவாறே எதிரிலுள்ள ப்ரம்மாண்டமான ஹாஸ்டல் கட்டிடத்தை நோக்கிக்கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு ப்யூன்

அங்குவந்து ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்துப் பின் வெளியே சென்முன்.

ரங்காதனுக்கு இது மிகவும் வியப்பாயும், விநோதமாயுமிருந் தது. உடனே அதைப் படிக்கவாரம்பித்தார்.

"டியர் ஸார்!

உங்களுக்கு எல்லாவித செளகரியங்களும் இருக்கிறதா! ரூமில் நல்ல காற்று வருகிறதா! நீங்கள் ட்ரிங்கு சாப்பிடுகிற தாயின் எதிரிலுள்ள அலமாரியில் விதவிதமாக இருக்கிறது; எடுத்துக்கொள்ளலாம். அதற்கும் மேலான செளகரியம் வேண்டுமாயின் உங்கள் அறையிலுள்ள மணியை அழுத்துங்கள் பதில் கிடைக்கும். இந்த ஹோட்டலில் கிடைக்காத செளகரி யங்கள் உலகத்திலேயே கிடைக்காது.

இங்ஙனம்,

மானேஜர்"

அளப்பரிய ஆச்சரியத்தில் மூழ்கியவராய் "இதென்னவேடிக்கை! இதன் அர்த்தமென்ன? எதை உத்தேசித்து இப்படி எழுதியிருக் கிருன்" என்று சற்று நேரம் ஒன்றுமே புரியாது யோசனையில் ஆழ்ந்து குழம்பித்தவித்தார். "இதன் ரகஸியம்தான் என்ன பார்த்து விடுவோம்" என்று எண்ணி பெல்லை அழுத்தினர்.

சில வினடிக்கெல்லாம் ஒரு கம்பீரமான மனிதன் நவநாகரீக உடை யணிந்துகொண்டு சிரித்த முகத்துடன் உள்ளே வந்தான். ரங்காதன் அவனை வரவேற்று "வாருங்கள்! வாருங்கள்!" என்று கூறி உட்காரவைத்து, "ஸார்! நான் இந்த ஊருக்குப் புதிது. எனக்கு ஒன்றுமே தெரியாது. உங்கள் கடிதத்தின் இந்த பாகத் திற்கு எனக்குப் பொருளே விளங்கவில்லை. ஆதலால் நேரில் கேட்க லாம் என்று கூப்பிட்டேன்" என்றுவெட்டவெளிச்சமாய்க் கூறினர்.

இதைக்கேட்ட வாலிபன் சிரித்தபடியே "ஸார்! இதுமாதிரி கேட்டவர்களை நான் முதல்முதல் இப்போதுதான் பார்க்கிறேன் எனக்கு வியப்பாகவிருக்கிறது. பலவிதமான கேளிக்கைகளை உத் தேசித்து இந்த ஒட்டலுக்கு எத்தனை பெரிய மனிதர்கள் வரு கிருர்கள் தெரியுமா! அதோ அந்த சாரியில் பாருங்கள். ஜோடி ஜோடியாய் பறவைகள் உள்ளே இருக்கின்றன. இங்கு நீங்கள் தனியாயிருக்கிறீர்களே என்று கேட்டேன்" என்முன்.

இதைக்கேட்ட ரங்காதனுக்குப் புரிந்துவிட்டது. 'சரி. மறு படியும் யோசித்துப் பெல்லடிக்கிறேன்' என்று கூறி அவனை அனுப் பினர். அவர் மனது குழம்பவாரம்பித்தது. "இது வெறும் ஒட்டலா! பிராத்தல் ஹவுஸா!" என்று சந்தேகம் உண்டாகியது. சற்று நேரம் பிரமைபிடித்தவர்போல் உலாவினர். பிறகு ஒருவிதமான தீர்மானத் திற்கு வந்து மறுபடியும் மணியை அடித்தார்.

மீண்டும் அம் மனிதன் வந்தான். "சரி! உம்முடைய விருப்பப் படியே நடக்கட்டும்" என்றார். அடுத்த நிமிடமே அவ்வறையின் ரகஸிய வழியொன்று அலமாரி போன்றுள்ள இடத்திலிருந்து திறக்கப்பட்டது. அந்த இடம் தேவலோகத்திற்கு ஒப்பான அலங்காரத்துடன் ஜ்வலிப்பதைப் பார்த்ததும் இவருக்கே பிரமிப் பாயிருந்தது. அந்த அறைக்குள் வீசும் பரிமளத்தின் அளவைக் கூறமுடியாது. எங்கு பார்த்தாலும் நிலைக்கண்ணாடியும், விசித்திர படங்களும், வர்ண வேலைப்பாடமைந்த சித்திரங்களும், கண்ணைக் கவரும் கைவேலைகளும் ஒன்றன்பின்னொன்று ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்தது.

ரங்கநாதனை ஒரு விசை நாற்காலியில் உட்காரச்செய்தான். உட் கார்ந்த நிமிடமே அது ஆனந்தமாய்ப் பாடவாரம்பித்ததுகண்டு ரங்க நாதனின் ஆச்சரியம் பின்னும் எல்லை கடந்தது. அந்த மனிதன் ஒரு பொத்தானை அழுத்தினான். சுவரில் நிலைக்கண்ணாடிபோலிருந்த படம் கதவாகமாறி திறக்கப்பட்டதும் அதன்வழியாகசுமார் 10பெண்கள் வெகு நாகரீகமாக அலங்காரம் செய்துகொண்டுவந்தார்கள்.

இந்த காட்சியைக் கண்ட ரங்கநாதனின் தலையே சுற்றவாரம் பித்தது. இவர்களில் பிடித்த...என்று மானேஜர் இழுத்தார்போல் கூறினான். அவர்களில் வெகு ஜோராக உடையணிந்துகொண்டு கம் பீரமாயும் குண்டுதைரியமாயுமுள்ள பெண்ணை இவர் இமைகொட் டாது பார்த்ததால் ஓட்டல்காரன் இதையறிந்து மற்றவர்களைப் போகும்படி சைகை காட்டிவிட்டுத் தானும் போய்விட்டான்.

அவன் போன உடனே கதவுகள் டக்டக்கென்று தாமாக சாற்றிக்கொண்டன. அறையிலிருந்த பெண் சற்றும் கூச்சமோ, பயமோ ஒன்றுமில்லாமல் வெகு தைரியமாக வந்து "குட் நைட்ஸார்! என்று கூறியபடியே அவர் உட்கார்ந்திருந்த சோபாவில் அமர்ந் தாள். ரங்கநாதனின் உடம்பு சிலிர்த்து நடுங்கியது. அவர் நகர்ந்து வேறொரு சோபாவிலமர்ந்தவாறு, பதிலுக்கு "குட் நைட்" என்றார்.

சில விநாடி மௌனமாயிருந்தார். பிறகு பேசத்தொடங்கி "இந்த அலங்காரங்களெல்லாம் நீங்கள் செய்ததுதானோ! வெகு நேர்த் தியாயிருக்கிறது" என்றார்.

பெண்:—இல்லை; இல்லை. இவைகளெல்லாம் ஓட்டல்காரரே செய்தவை. எங்களுக்கு இந்த வேலையே இல்லை.

ரங்:—அப்படியா! நீங்கள் இந்த ஹோட்டலிலேயேதான் இருப்பதோ! உங்களுக்குப் பெற்றோர்கள் உற்றோர்கள் உண்டா!

பெண்:—ஏதேது பெரிய யோகக்ஷேமங்களையெல்லாம் விசாரிக் கின்றீர்களே! பெற்றோர் உற்றோர் எல்லோருமிருக்கிறார்கள். நாங்கள் ஓட்டலில் வசிப்பது கிடையாது. எங்களுக்குச் சந்தர்ப்பம் நேரிடும் போது வருவோம்.

ரங்:—உன் பெயரென்னம்மா! உன் பெற்றோர்கள் நீ இம் மாதிரி இருப்பதற்குச் சம்மதிக்கிறார்களா!...இந்தா பணம்...

பெண்:—என்னிஷ்டத்திற்கு ஒருவருடைய சம்மதமெதற்கு? எங்கப்பாவும் உங்களைப்போன்ற பெரிய மனிதர்தான். ஆனால் காலாகாலத்தில் பெண்களை விவாகத்தைச்செய்து, வைக்கவேண்டிய வழியில்வைக்காது "படிப்பு படிப்பு"என்று ஹாஸ்டலுக்கு அனுப்பி விட்டால் அவர்கள் அடையும் பலன் இதுதான். என் பெயர் கமலா கற்பனையூரில் எங்கப்பா [illegible] ராமநாதன் என்பது அவர் பெயர்...எனக்கு வேண்டியது பணம்! நாங்கள் பணத்திற்குப் பறக்கிறவர்களில்லை...

33058

இதைக்கேட்டதும் ரங்கநாதனுக்கு உலகம் அப்படியே தலை கீழாய் சுற்றுவதுபோல் தோன்றியது. பேரிடியே தலைமேல் விழு வதுபோன்ற அதிர்ச்சி உண்டாகியது "என்ன! ராமுவின் பெண் கமலாவா!...நீ ஹாஸ்டலில் படிக்கும் மாணவியல்லவா!" என்று மன அதிர்ச்சியுடன் கேட்டார்.

பெண்:—ஆம். மாணவிதான். நாங்கள் விடுமுறைக்குக்கூட ஊருக்குப்போவதில்லை. ஆனந்தமாக இங்கு பொழுதுபோகிறது. எங்கள் தலைவி எங்களுக்கு எந்தவித உதவியும் செய்கிறாள். நாங்கள் ஒரு கஷ்டமுமின்றி இருக்கிறோம். சந்தோஷ வாழ்க்கைக்காகவே இந்த ஹாஸ்டலில் சில பெண்கள் சேருகிறார்கள். இம்மாதிரி பிரியப் படாதவர்களும் ஹாஸ்டலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நடக்கும் உபசாரங்கள் ஒருமாதிரிதானிருக்கும்—என்றாள்.

ஒரு இளம்வயதுப் பெண். முன்பின் பார்க்காத மனிதனிடம் பேசும் தைரியமும் நடக்கும்மாதிரியும் அவரால் பொறுக்கவேமுடிய வில்லை. எதையோ நினைத்தவர்போல் ஆவேசத்துடன் எழுந்தார். 'கமலா!...உன்னைப் பார்க்கும்போதே நீயார் என்பதை நான் அறிந்து கொண்டேன். உங்கப்பாவிடம் நேற்றுகூட உன்னைப்பற்றிப் பேசி னேன். உன் புகைப்படத்தையும் பார்த்தேன். நீ இந்தமாதிரி மானங்கெட்ட பிழைப்பு பிழைப்பதை அறியாத உன் தந்தை உன் னைப்பற்றியும் உன் ஹாஸ்டலைப்பற்றியும் அபாரமான பெருமையடித் துப்பேசினார். கமலா!என் வயிறுஎரிகிறது. என் ரத்தம் கொதிக்கிறது. நீ யாரென்பதை ஒளித்துப் பேசுகிறாயா, உண்மையைக் கூறுகிறாயா என்பதையறியும் பொருட்டாக நான் உன்னைப் பரீக்ஷித்தேன். மானங்கெட்ட மூதேவியே! ஹாஸ்டல் என்கிற பெயரை வைத்துக் கொண்டு இப்படியா அக்ரமம் செய்கிறாள்? சீச்சீ! என்னெதிரில் நிற்காதே ஓடிப்போ!"...என்று கன்னத்தில் வீங்கும்படி பட்டார் பட்டாரென்று அறைந்து கழுத்தைப்பிடித்துத் தள்ளினார்.

பரிசுகளின் விவரங்கள்

1941-ம்ஞூ ஸெப்டீ 25-ந்தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய நமது நாவல்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

ந.	ரூ.	சந்தா ந.		விலாசம்.	போஸ்டேஜ். ரூ. அ.
1.	20	T.	178	Sri. Thylammal, Krishna Kumber Chawl, Elphinstone Road, Kirkee.	2 11
2.	15	I.	75	M. M. Ismail Esq., No. 199, J. Bakak, Pontian, Johore.	3 0
3.	10	R.	1031	Sri. A. K. Ramiah, Kegalla. (Ceylon.)	1 7
4.	5	S.	1600	„ T. G. Sundaram, 25, Adam St, Mylapore.	
5.	5	S.	1066	„ M. Singara Pillai, Yeni P. O. (Toungoo Dt.) Burma.	0 15
6.	5	V.	617	„ S. Venkatarama Iyer, Madras Arya Bhavan, Tirukkazhikundram.	0 14

குறைந்த விலை — **அரிய சந்தர்ப்பம்** — கொஞ்சம் பிரதிகள்தான்

அடியிற்கண்ட நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டிய அன்பர்கள் உடனே முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

	சஞ்சிகை விலை.	தனிநாவல் விலை.		சஞ்சிகை விலை.	தனிநாவல் விலை.
உணர்ச்சிவெள்ளம் ரூ	0 12	1 8	சந்திரமண்டலம்	0 8	1 0
சந்தோஷமலர்	0 12	1 8	படகோட்டி	0 4	0 8
ஜீவியச்சுழல்	0 10	1 4	மாலதி	0 4	0 8
கானல் நீர்	0 10	1 4			

கீழ்க்கண்ட நாவல்களில், சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் (Shop-soiled) அவற்றைப் பாதி விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தபாற் செலவு வேறு. 2 நாவல்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ. 1/8 அனுப்பினால் தபாற்செலவு இனம்.

	பாதி விலை.		தபாற்செலவு. உள்நாடு	வெளிநாடு
சாரமதி	ரூ. 0 14	அணு	$2\frac{3}{4}$	$3\frac{3}{4}$
பரிமளகேசவன்	0 10		2	3

அக்டோபர் கடைசிவரைதான்

பல சந்தாநேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, "சுடர்விளக்கு" 5 அணுவுக்கு (வெளிநாடு 2 கூபன்கள்) கொடுக்கப்படும். இதே விலைக்கு ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

"JAGANMOHINI" Vol. XVIII No. 10 Regd. No. M. 2210.

சுடர் விளக்கு

அணா
6

வை.மு.கோதைநாயகி அம்மாள்

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.